Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2016

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல்


வாசமாயிருக்கும் தேவ ஆவி • ஆவியின் சாட்சி • நம்மைநாம் சோதித்து அறியலாம்

தனிப்பட்ட அர்ப்பணிப்பின் உவமைகள் • ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கான வாக்குத்தத்தங்கள் • மணவாட்டி வகுப்பார் • விசுவாச வீட்டார்

ஆவியில் ஜெநிப்பிக்கப்படுதல் (கருத்தரிக்கப்படுதல்)

# ஆதியிலே



"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17). கணக்கிட்டபடி எக்காலத்திலும் வாழ்ந்த, 20 பில்லியன் ஜனங்களில் 144,000 பேர்கள் மட்டுமே புது சிருஷ்டியின் அங்கத்தினராக சகல சிறப்புரிமைகளோடும், ஆசீர்வாதங்களோடும், மகிமையோடும் தகுதிப்பெறுவார்கள். ஆயினும் கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன் வாழ்ந்த எவரும் இந்த அழைப்பின் வாய்ப்புக்குள் பங்கெடுக்க முடியாது. "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்" (மத்தேயு 11:11).

கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக மாறுவதற்கு, தேவனுடைய அழைப்புக்குச் செவிகொடுக்கும் யாவரும், பரிசுத்த ஆவியைத் தங்களுடைய மனமார்ந்த சுதந்தரமாகப் பெற்றுக்கொள்வார்கள் (எபேசியர் 1:14). பாஸ்டரல் பைபிள் இன்ஸ்டிடியூஷன் சகோதரர் ஜான் டி ரீட் இயக்குனரும், முந்தைய புனித யாத்ரீகருமான சகோதரர் சி. டானின் உரையாடலின் அடிப்படையில், "வாசமாயிருக்கும் தேவ ஆவி" என்ற தலைப்பு பரிசுத்த ஆவி என்பது என்ன? வசனங்களில் இது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? இது இயேசுவுக்குள் எவ்வகையில் தாக்கங்களை ஏற்படுத்தியது? மற்றும் இவ்வாறாக இயேசுவைப்போல வளர்வதற்கு தங்களை அர்ப்பணித்தவர்களுக்குள் எப்படிப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை ஆழமாக நோக்குகிறது.

"நான் உண்மையில் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறேனா," என்று எவ்வாறு நான் அறிந்துகொள்வது?" என்ற கேள்விக்கு, "ஆவியில் சாட்சி" பதிலளிக்கிறது - மற்றும் யேகோவா தேவனிடம் நம்மை அழைத்துச்செல்லும் வழிமுறை, நம்முடைய வாழ்க்கையில் அவருடைய தாக்கங்களின் அனுபவம், இயேசுவின் பிரசன்னத்தை நம்முடைய மூத்த சகோதரராக உணருதல், அறிவின் வளர்ச்சி, நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட நிலையில் கரத்தை சோதிக்கும் அனுபவங்கள் அனைத்தும், கிறிஸ்துவுக்குள் ஒரு சிருஷ்டியாக நம்முடைய வளர்ச்சியின் அடையாளங்களாகும்.

கிறிஸ்தவர்களாக நாம் அர்ப்பணித்தப் பொதுவான இலக்குகளில் வளர்ச்சியடைவதற்கு நமக்கு உதவிசெய்யும்படி 18-ஆம் வசனத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட கேள்விகள், "நம்மை நாம் சோதித்தறியலாம்" என்ற தலைப்பு கேட்கிறது.

இயேசு பெரும்பாலும் உவமைகளினால் ஜனங்களுக்குக் கற்றுக்கொடுத்தார். கிறிஸ்தவ பொறுப்புகள் மற்றும் கணக்கொப்புவித்தலை, மூன்று உவமைகளை, "தனிப்பட்ட அர்ப்பணிப்பின் உவமைகள்" என்ற தலைப்பு ஆராய்கிறது. நாம் நம்முடைய தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும், சகோதர சகோதரிகளுக்கு உதவிசெய்ய வேண்டும் மற்றும் கிறிஸ்துவினிமித்தமாக ஒப்புக்கொண்ட வேலைகளைச்செய்ய வேண்டும்.

"ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர் களுக்குரிய வாக்குத்தத் தங்கள்" வேதாகமத்தில் நிரம்பி வழிகிறது. பெந்தெகொஸ்தே நாளன்று இயேசுவின் சீஷர்கள் இதிலுள்ள பெரும்பாலானவை களைப் புரிந்துகொண்டார்கள். கேடான இந்த உலகத்தில், பவுலின் எழுத்துக்கள் புறஜாதிகளுக்கும், யூத கிறிஸ்தவர் களுக்கும் நம்பிக்கையை தந்தது. இந்த உலகம், மாம்சம் மற்றும் பிசாசை மேற்கொள்வதற்கு இந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு உதவி செய்கிறது.

சபை வகுப்பாரின் பல விவரங்கள் வேதத்தில் மறைக்கப்பட்டுள்ளது. வேதாகமத்திலுள்ள ஸ்தரீகளுக்குள் சித்தரிக்கப்பட்டுள்ள உள்ளார்ந்த அழகையும் ஆவிக்குரிய கனிகளையும் பற்றி, "மணவாட்டி வகுப்பார்" என்ற தலைப்பு காண்கிறது. நாமும் இப்படிப்பட்ட அழகை நமக்குள் வளர்ச்சியடைய செய்தற்காகவே அழைக்கப்பட்டுள்ளோம்.

நம்முடைய ஐக்கியத்தில் சிலர் தேவனிடத்தில் அர்ப்பணிக்காவிட்டாலும், அற்புதமான வழியில் சசோதரர்களுக்கு ஊழியஞ்செய்தார்கள். தேவனை உண்மையாக அன்புகூருகிறவர்கள் பரிசு பெறாமல் போவதில்லை என்று, "விசுவாச வீட்டார்" என்ற நம்முடைய கடைசி தலைப்பு காட்டுகிறது.

ஒவ்வொரு வாசகர்களும், தேவனுடைய பிள்ளையாக இருப்பதன் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கவும், இயேசு மற்றும் நம்முடைய பரலோக பிதாவின் பிரசன்னத்தை தங்களுடைய வாழ்க்கையில் இன்னும் ஆழமாக உணர்வதற்கும் இந்தப் பிரதி உதவிசெய்ய வேண்டும் என்பதற்காக ஜெபிக்கிறோம்.

ஜுலை / ஆகஸ்ட் 2016


**வாசமாயிருக்கும் தேவ ஆவி** 37
உள்ளுக்குள் ஒரு தாக்கம்

**ஆவியின் சாட்சி** 43
தேவனுடைய பிள்ளைகள்

**நம்மை நாம் சோதித்து அறியலாம்** 47
நம்மையே சோதிக்கலாம்

**தனிப்பட்ட அர்ப்பணிப்பின் உவமைகள்** 51
சபைகளினால் கற்பித்தல்

**ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கான வாக்குத்தத்தங்கள்** 57
விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்

**மணவாட்டி வகுப்பார்** 62
ஒரு விசேஷித்த அழைப்பு

**விசுவாச வீட்டார்** 62
நீதியுள்ள வாழ்க்கை எப்பொழுதும் மதிக்கப்படும்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 66
ஐந்து வருடங்களுக்குப் பிறகு அரேபிய எழுச்சி

உள்ளுக்குள் ஒரு தாக்கம்

# தாகமாயிருக்கும் தேவ ஆவி



"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் ... மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:11-14).

From a discourse by : John T. Reed

தேவ ஆவி - அது என்ன? அது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது மற்றும் அது என்ன செய்கிறது? ஏனெனில் ஒருவருக்குள் வாசமாயிருக்கும் தேவ ஆவியே, அவர் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதற்கான ஆதாரம். இந்தக் கேள்விகளுக்கான விடைகளை அறிந்துகொள்வது சரியானதாகவும், முக்கியமானதாகவும் இருக்கிறது. இந்தப் புரிந்துகொள்ளக்கூடிய இருதயங்கள் சிந்தனைகளினால், தேவனோடு நாம் கொண்டுள்ள ஐக்கியம் எந்தளவில் இருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்" (2 கொரிந்தியர் 13:5) என்று பவுலும் கூறுகிறார்.

அதிகரிக்கக்கூடிய ஒளியினால் ஆசீர்வதிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்தவான்கள் இந்தக் காரியத்தைக்குறித்து புரிந்துகொள்வதற்கு எந்த தடையுமில்லை. பரிசுத்த ஆவி ஒரு ஆள் என்றும், அதாவது திரியேக தேவனின் மூன்றாவது நபர் என்றும் விசுவாசிக்கிறவர்களுக்கு இது புரியாது. சத்தியத்தை விலக்கவும், தங்களையும், பிறரையும் பொய்யான போதனை மற்றும் கோட்பாடுகளிலிருந்து பாதுகாக்கவும், மனிதனால் முன்வைக்கப்பட்ட போதனையின் நியாயமின்மைக்கும், குழப்பத்திற்கும் திருத்துவத்தின்மீது வைத்த நம்பிக்கையே காரணமாகும். பாதுகாக்கவும் மனிதனால் முன்வைக்கப்பட்ட போதனையின் நியாயமின்மைக்கும், துவக்கத்திற்கும் திரித்துவத்தின் மீது வைத்த நம்பிக்கையே காரணம்.

மேலும் நாம் வசனங்களைச் சரியாகப் புரிந்துகொண்டால், தேவனுடைய வல்லமையை எப்போதும் செயலாற்றுவது பரிசுத்த ஆவியாகும். மேலும் அதன் தாக்கத்தின் வழியாக அவர் பணி செய்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ஆற்றலுடையவராக இருக்கிறார் மற்றும் அனைத்திற்கும் அவருடைய அறிவே பின்னணி!

## தேவனுடைய ஆவி:

ஆவி முதன்முறையாக தேவனுடைய வல்லமையாகக் குறிப்பிடப்படுகிறது. "தேவ ஆவியானது ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தது" (ஆதியாகமம் 1:2). ஆசரிப்புக் கூடாரம் தொடர்புள்ள சகல கட்டுமானப் பணிகளை செய்யக்கூடிய ஊழியக்காரர்களுக்கு, தேவ ஆவி திறமையையும் முழு ஆற்றலையும் கொடுத்தது. "நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதயமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக" (யாத்திராகமம் 28:3) என்று தேவன் அவர்களை அழைக்கிறார்.

தீர்க்கதரிசனத்தைப் பொறுத்தவரையில், "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2 பேதுரு 1:21) என்று பேதுரு கூறுகிறார். ஆனால் பரிசுத்த ஆவி தன் சுய சித்தத்தின்படி பேசியதா? நிச்சயமாக இல்லை. "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசியது" (எபிரெயர் 1:1). ஆபிரகாமின் சந்ததியின் வழியாக, பூமியின் முழு குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தைப் பொறுத்தவரையில், "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" (அப்போஸ்தலர் 3:21) என்று பேதுரு குறிப்பிட்டுத் தெரிவிக்கிறார்.

தம்மை வெளிப்படுத்திக்கொள்வதற்கு பரிசுத்த ஆவி ஒருபோதும் உருவம் எடுப்பதில்லை. ஆனால் தேவனால் மட்டுமே அது ஊற்றப்படும் அல்லது வெளிப்படுத்தப்படும். "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் ... ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" (யோயேல் 2:28. 29) என்றே தேவன் யோயேல் தீர்க்கதரிசியின் வழியாக கூறினார். பேதுருவைப் பொறுத்தவரையில் பெந்தெகொஸ்தே

நாளில் இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி நிறைவேறியது. உண்மையில் ஆயிரக் கணக்கானவர்கள் மேல் ஒரே நேரத்தில் ஒருவர் பொழியப்படுவது விசித்திரமானக் காரியமாகும். ஆனால் தேவனுடைய சிந்தை மற்றும் அவருடைய ஆற்றல் அப்படியாக செயல்படும் என்று நாம் சிந்திப்பதற்கு நியாயமாக தோன்றுகிறது.

ரூவா (ruach) (Strong's #7307) என்ற எபிரெய வார்த்தை ஆதி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு காற்று அல்லது காற்றோட்டம் என்று பொருள். இவ்வார்த்தை 389 முறை பழைய ஏற்பாட்டிலும்; 224 முறை ஆவி என்றும்; 165 முறை காற்று, காற்றோட்டம், சுவாசம், கடுங்காற்று, சிந்தை, கோபம் போன்ற வெவ்வேறு வார்த்தைகளிலும் காணப்படுகிறது. ஆகவே இதன் பொருள், அந்த வார்த்தையின் பயன்பாட்டிலிருந்து குறிப்பிடப்பட வேண்டும்.

பரிசுத்த ஆவி கண்ணுக்குப் புலப்படாத பலம் அல்லது தாக்கம் என்ற அடிப்படையான கருத்து வேதம் முழுவதிலும் காணப்படுகிறது. இந்த பெலன் வெவ்வேறு விதங்களில் செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு வழிகளில் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆயினும் இதன் விளைவுகளாகிய வெளிப்பாட்டை தவிர எப்பொழுதும் இது கண்ணுக்குப் புலப்படாததை அடையாளப்படுத்தும்.

"யேகோவா தேவன் தாமே தம்முடைய ஆவியைக்கொண்டு, அவருடைய வார்த்தைகளைச் சுறுசுறுப்பாகச் செயல்படுத்துபவர். அவருடைய ஆவியினால் அவர் சிருஷ்டிக்கிறார். அதனால் அவர் உயிரூட்டுகிறார்; அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற கிரியைச் செய்யும்படிக்கு, அவருடைய வார்த்தைகளை மனுஷன் பெற்றுக்கொள்ள அதனால் அவர்களை ஊக்குவிக்கிறார். "உண்மையில் ஆச்சரியமூட்டும் காரியம் என்னவெனில், 3500 வருடங்களில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றில், தேவனுடைய குமாரன் செய்த கிரியைகள் தெளிவாக வாக்கியங்களில் காணப்படுகிறதே தவிர, பரிசுத்த ஆவி ஆள் தத்துவம் பெற்றிருப்பதை எங்கும் காணப்படுவதில்லை" (Bible Doctrine of the Holy Spirit, 1931, Cly Publishing).

**சுவிசேஷங்களில் பரிசுத்த ஆவி:**

துவக்கத்தில் எழுதப்பட்ட சுவிசேஷங்களில் "ஆவி" என்ற வார்த்தையின் பயன்பாடு பழைய ஏற்பாட்டில் நாம் பார்த்தபடியே காணப்படுகிறது. எந்த ஆள்தத்துவமும் காணப்படுவதில்லை. தேவனிடத்திலிருந்து வரும் கண்ணுக்குப் புலப்படாத வல்லமை அல்லது தாக்கம் பல்வேறு வழிகளில் செயல்படுகிறது. யோவான் ஸ்நானன் மற்றும் இயேசு, ஆகிய இருவரும் தேவனுடைய ஆவியினால் தங்களுடைய தாயின் வயிற்றிலே ஜெநிப்பிக்கப்பட்டார்கள். யோவான் இயல்பான வழியில் பிறந்ததினால் அவர் சகரியாவின் குமாரன் என்று அழைக்கப்பட்டார். இயேசு தேவனுடைய தெய்வீக வல்லமையினால் கருத்தரிக்கப்பட்டதினால் அவர், "உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (லூக்கா 1:35) என்று அழைக்கப்பட்டார்.

பரிசுத்த ஆவி ஆள்தத்துவம் பெற்றிருந்தால், மரியாளிடம் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி அவளிடத்தில் பிறக்கும் குழந்தை பரிசுத்த ஆவியின் குழந்தையாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இயேசு எப்பொழுதும் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார். புருஷனை அறியாத நான் ஒரு குழந்தையை எவ்வாறு கருத்தரிக்கக்கூடும் என்று மரியாள் அந்த தூதனிடம் கேட்டபோது, "தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (லூக்கா 1:35).

"பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்" (யோவான் 15:26) என்று இயேசு கூறினார். இந்த வசனத்தில் "தேற்றரவாளன்" என்ற சொல்லுடன் ஒத்துவர வேண்டுமென்ற காரணத்திற்காகவே பரிசுத்த ஆவியைக்குறிக்க "அவர்" என்ற சொல் அமைந்துள்ளது.

பரிசுத்த ஆவி பிதாவினிடமிருந்து வருகிறதாக இயேசு கூறினார். இப்படியாக பரிசுத்த ஆவி தேவனிடமிருந்து வருகிறதென்றும், அவர் வழியாகச் செயல்படுகிறதென்றும், எந்தவிதத்திலும் அது தனிப்பட்ட ஒரு நபர் இல்லை என்றும் மறுபடியும் உறுதிபடுத்துகிறார்.

நியூமா (pneum) என்ற கிரேக்க வார்த்தை "ஆவி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது ஆண், பெண் (Nuter, Gender) வேறுபாடற்ற நிலையாகும். "உலகம் அந்தச் சத்திய ஆவியைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான் 14:17) என்று இயேசு கூறினார். பயன்படுத்தப்படும் ஐந்து பெயர்

பொருட்களும் ஆண் பெண் வேறுபாடற்ற அது, அது, அது, அது என்று கூறப்பட வேண்டும்.

**ஆவியில் பரிசுத்தம்:**

"தேவனுடைய ஆவி என் நாசியில் உள்ளது" என்று யோபு கூறுகிறார். இதேபேச்சு வடிவத்தைப் பயன்படுத்தி, கண்ணுக்குப் புலப்படாத ஜீவனுக்குரிய வல்லமை அல்லது ஆவியே, ஆதாமின் சிருஷ்டிப்போடு தொடர்புள்ளதாகப் பயன்படுத்தப்படுகிறது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7). பரிபூரணமாகச் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமின் நாசியில் தேவ ஆவி ஊதப்படும்வரையில் ஜீவனற்று இருந்தார். தேவனுடைய சிருஷ்டிகளை உயிரூட்டுவதற்கான அதே கோட்பாட்டின் அடிப்படையில் ஆதாமும் ஜீவனைப்பெற்றார்.

ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு இன்னும் தேவனுடைய ஆவி செயலாற்றிக் கொண்டிருக்கிறது. "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63) என்று இயேசு கூறினார். "உயிர்ப்பிக்கிறது" என்ற வார்த்தைக்கு "உயிர்க்கொடுக்கிறது" என்று பொருளாகும். ஆவியே "உயிர்க்கொடுக்கிறது."

"கிறிஸ்து இயேவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்" (1 கொரிந்தியர் 4:15) என்று பவுல் கூறுகிறார். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" (2 கொரிந்தியர் 5:17; ரோமர் 8:6). இந்தச் சமாதானம் உண்மையானால், இந்த ஜீவனும் உண்மையாக இருக்க வேண்டும்.

பழைய மாம்ச சரீரத்தின் மூளையில், இந்தப் புது சிந்தை அல்லது புது சிருஷ்டி தோன்ற வேண்டும். அது உயிரோடு வாழ்ந்து வளர்ச்சியடைந்தால், தனக்குரிய வல்லமையினால் சரீரத்தைத் தன்னுடைய சொந்த தேவைக்காகப் பயன்படுத்திக்கொள்ளும். "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11) என்று பவுல் கூறுகிறார். இந்த சரீரங்கள், பரிபூரணமான ஜீவனுக்கும், நலனுக்கும் திரும்புவதை இது பொருள்படுத்தாமல், நீதியின் கருவிகளாகச் செயல்படுத்த இயக்கப்படுகிறார்கள்.

சரீரத்தின் கிரியைகளை மட்டுமே நாம் தடுத்து அல்லது அழிக்க வேண்டும், மாறாக சரீரத்தை அல்ல. புதிய சிந்தையின் தற்காலிகமான ஜீவியாக இருப்பதற்குப் பழைய மனுஷன் அதாவது பழைய சிந்தைக் கொல்லப்பட வேண்டும். "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே, உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1 கொரிந்தியர் 6:15, 19) என்று பவுல் கூறுகிறார்.

தேவனுடைய ஆவியின் ஆற்றல் மற்றும் உயிர்கொடுக்கும் வல்லமையின் வழியாக கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக நாம் மாறுகிறோம். ஆனால் உருவகமாகப் பேசும்போது, நாம் கருத்தரிக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்படுகிறோம் நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுக்குள் தேவனால் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுதலில் நம்முடைய பிறப்பு நடைபெறும். தேவ ஆவி தங்கியிருப்பவரிடம் அவருடைய ஆவியே ஞானத்தின் ஆவியாகவும் இருக்கும். மோசே, யோசுவா அல்லது சாலொமோனிடம் இது சிருஷ்டிப்பின் வல்லமையாக அல்ல, அது ஞானமும் வல்லமையாகவும் செயல்பட்டது.

**இயேசுவுக்குள் பரித்த ஆவி:**

"ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானது அவர்மேல் தங்கியிருக்கும். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்" (ஏசாயா 11:2, 3) என்று இயேசுவைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. இந்த ஆவியின் வெளிப்பாடு ஒன்றோடொன்று பிண்ணிப்பிணைந்திருப்பதினால், அதை வேறுபடுத்திப் பார்க்கவும், வித்தியாசமான குறிப்புகளைக் காணமுடியாதபடிக்கு, ஏதோ ஒரு விதத்தில் கடினமாக உள்ளது. ஞானம், புரிந்துகொள்ளுதல் மற்றும் அறிவு - இவைகளுக்குள் ஒற்றுமையான அநேக குறிப்புகள் உள்ளது. ஒவ்வொன்றாக நாம் காணலாம்.

• **ஞானம்** அறிவைச் சரியாகப் பொருத்தி, நியாயத்தைப் பூரணப்படுத்துவதின் விளைவே ஞானமாகும். படிப்பது அல்லது கற்பிக்கப்பட்ட எதையும் புரிந்துகொள்வதற்கான அறிவாற்றலின் வல்லமையே புரிந்துகொள்வதாகும்.

• **புத்திமதி** கொடுப்பது அல்லது பெற்றுக்கொள்வது தொடர்புடையதாக உள்ளது. "பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள். ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்" (நீதிமொழிகள் 4:1, 7).

• **புரிந்துகொள்ளுதல்** தேவனுடைய ஆவி தனக்கே உரிய நீதியின் பாதையில் நடத்தி சுயத்தைக் கட்டுப்படுத்துவதின் விளைவாகப் புரிந்துகொள்ளப்படும் "நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான் " (நீதிமொழிகள் 14:29, 25:28)

• **வல்லமை** தடைகள் ஏற்பட்டாலும், அவருடைய அறிவுரைகளைப் பின் தொடர்ந்து, தேவ சித்தம் செய்வதற்கான கிருபை மற்றும் பலத்தை இது குறிக்கிறது. "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்" (எபேசியர் 3:16) என்று பவுல் வேண்டுகிறார்.

• **"யேகோவா தேவனுக்குப் பயப்படும் பயம்"** தேவன் பழிவாங்குவதினால், அவர்மேல் பேரச்சம் கொண்டல்ல, மாறாக அவருடைய நியாயம் மற்றும் நீதியான குணத்தை உண்மையாகப் பாராட்டி பக்தியினால் கேள்விக்கு இடமில்லாத கீழ்ப்படிதல் இதற்குத் தொடர்புடையதாக உள்ளது.

பாவத்தை அருவருக்கிற பரலோக தந்தையின் குணத்தினிமித்தம், நம்முடைய ஆண்டவர் அவர்மேல் ஆழ்ந்த மதிப்பைக்கொண்டிருக்கிறார். தம்முடைய பிதாவின் அன்பு மற்றும் தயவைத் தொடர்ந்து நீடித்திருப்பதற்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த அவர் முழுமையாகக் கீழ்ப்படிந்திருப்பதற்கு உச்ச அளவின் பயத்தோடு ஜாக்கிரதையாக இருந்தார்.

இந்தப் பயமே 'ஞானத்தின் ஆரம்பம்' என்று சொல்லப்படுகிறது. நிச்சயமாக அதற்குப் பின் இந்த ஞானத்தின் வழியில் மட்டுமே, உறுதியான மனநிறைவோடு தேவனுக்கு முழுமையான நன்மதிப்பைத் தந்து, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய ஜாக்கிரதையாக இருக்க முடியும். மிகுதியான அறிவை அடைவதற்குச் சாத்தியமுண்டு. ஆயினும் அதைப் பயன்படுத்துவதற்கு மிகச் சிறிய அளவிலான ஞானம் மட்டுமே வெளிப்படுத்தப்படும். நாம் பெற்ற அறிவை ஞானமாகப் பயன்படுத்தி தேவனுடைய சித்தத்தை மற்றக் காரியங்களில் உணர்ந்துகொள்வதில் தாமதமாவதற்கும் சாத்தியமுண்டு.

நம்முடைய ஆண்டவரின் பரிபூரணம், தேவனுடைய ஆவியோடு ஊடுருவியதால் பரிபூரண ஞானம், புரிந்துகொள்ளுதல், அறிவுரை, வல்லமை, அறிவு மற்றும் கீழ்ப்படிதலைப் பலனாகத் தந்தது. நாம் மிகவும் அபூரணராக இருப்பதினால், ஆவியின் கனிகளை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் நம்மிடம் வரம்புக்கு உட்பட்டுள்ளது. ஆனால் யேகோவா தேவனுக்குப் பயப்படும் பயம் - கீழ்ப்படிதலின் உண்மையான ஆவி - இயேசுவின் அடிச்சுவடுகளில் தொடர்ந்து பின்பற்றினால், அதிகமதிகமாக ஆவியின் கனிகளை வெளிப்படுத்துவதற்கான பயிற்சியில் வளர்ச்சியடைவதற்குத் தேவனுடைய கிருபை நமக்கு உதவும்.

கிறிஸ்துவின் வாழ்க்கையையும், மாதிரியையும் உற்று கவனித்து, தேவனுடைய ஆலோசனை மற்றும் புரிந்துகொள்ளுதலின் வழியில் அவர் நம்மை நடத்தும்படி, மெய் ஆர்வங்கொண்டு தேடுபவர்களுக்கு கிறிஸ்துவே ஞானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார். இயேசு குறைவற்ற சிந்தனையைக் கொண்டிருந்தார். ஆனால் இந்த விஷயத்தில் நாம் வரம்புக்கு உட்பட்டவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவின் வழியாகச் செயலாற்றும் தெய்வீக இரக்கம் மற்றும் கிருபையின்மேல் சார்ந்திருப்பதினால் நாம் தேவனுக்கு முன் அங்கீகரிக்கப்பட்ட நீதிமான்களாக நிற்கிறோம். "ஞானம் கூப்பிடுகிறதில்லையோ? புத்தி சத்தமிடுகிறதில்லையோ? அது வழியருகேயுள்ள மேடைகளிலும், நாற்சந்திகளிலும் நிற்கிறது. அது ஊர்வாசல்களின் ஓரத்திலும், பட்டணத்தின் முகப்பிலும், நடை கூடங்களிலும் நின்று சத்தமிட்டு: மனுஷரே உங்களை நோக்கிக் கூப்பிடுகிறேன் என் சத்தம் மனுப்புத்திரருக்குத் தொனிக்கும் " (ரோமர் 8:1-4).

விடுதலையைக்குறித்த பவுலின் அறிக்கை - இயேசு தம்முடைய சீஷர்களுக்குக்கொடுத்த வாக்குத்தத்தத்தில் சொல்லிய சுதந்தரத்தை வெளிப்படுத்துகிறது. "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32). நம்மை விடுதலையாக்கும் சத்தியம் எது? "அறிவீர்கள்" என்ற வார்த்தை "புரிந்துகொள்ளுதல்" என்ற பொருளைக்கொண்டுள்ளது. மேலும்

வெளிப்படக்கூடிய சத்தியப்போதனையில் அறிவை மட்டுமே கொண்டிராமல், பலவகையான அனுபவங்களின் உணர்வுகளாகவும் இருக்கிறது.

ஈடுபலியின் தத்துவத்தைப் புரிந்துகொண்டால் மட்டுமே, தீர்ப்பிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலைப்பெற முடியாது. இந்தப் புரிந்துகொள்ளுதல் மிகப்பெரிய சத்தியங்களை ஆழமாக அறிந்து கொள்வதற்கு நடத்தினாலும், நாம் விடுதலைப்பெற முடியாது. இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின்மேல் சார்ந்திருக்கும் விசுவாசத்தினால் மட்டுமே நம்முடைய தந்தையாகிய ஆதாம் சுதந்தரித்த மரணத் தீர்ப்பிலிருந்து விடுதலைப்பெறுவதற்கு தேவன் ஒரு அற்புதமான முன்னேற்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறார். சட்டப்பூர்வமான தீர்ப்பை திருப்தி செய்த இயேசுவின் மரணம், மனுஷர் ஜீவனுக்கு திரும்புவதை இனி தடுக்க முடியாது. ஏனெனில் நீதியின் வேண்டுகோள்களை தம்முடைய குமாரன் வழியாக நிறைவேற்றுவதற்கு தேவன் ஒரு முன் திட்டத்தை வடிவமைத்தார்.

"என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்" (எபிரெயர் 2:9). ஒப்புரவாகுதலின் வேலைக்கு ஈடுபலியின் கிரயம் மட்டும் போதுமானதல்ல, தொடர்ந்து செய்யப்படும் வேலையின்றி, ஈடுபலியை மட்டுமே மனுக்குலத்திற்கு எந்த நன்மையும் கொடுக்க முடியாது."அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (ரோமர் 4:25) என்று பவுல் கூறுகிறார். ஆசாரியர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டாலும் ஈடுபலியின் கிரயத்தைக் கொடுப்பதில் எந்தப் பங்கீட்டையும் பெறுவதில்லை. இயேசு மட்டும் இந்தக் கிரயத்தைச் செலுத்தக்கூடியவர். ஆனால் மனுக்குலத்தைப் பரிபூரண நிலைக்குத் திருப்பக்கூடிய மிகப்பெரிய ஒப்புரவாகுதலின் வேலையில் அவர்களுக்கு ஒரு பங்குண்டு. இதைச் செய்வதற்கு, அவர்களின் ஆண்டவரைப்போல சுய-தியாகம், பாடுகள் மற்றும் மரணத்தின் வழியாகப் பள்ளியில் பயிற்சி பெற வேண்டும். அவரைப் பின்பற்றுவதற்கு அனைத்தையும் விட்டுவிட்டு, தங்களுடைய சிலுவையை நித்தமும் சுமக்க வேண்டும். சகலவிதமான மனித ஜீவனுக்குரிய நம்பிக்கைகளும் பாரம்பரியங்களும் மரித்தாலும் சரி, பலியினால் தேவனோடு உடன்படிக்கைச் செய்ய வேண்டும். "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" (சங்கீதம் 50:5). "எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்" (எபிரெயர் 2:11) என்று அறிவிக்கப்படுகிறது. "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள், நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:27-29). "இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை."

**நமக்குள் இருக்கும் ஆவியின் சாட்சி:**

நமக்குள் வாசமாயிருக்கும் தேவ ஆவியே நாம் தேவனுடைய புத்திரராக அவரோடு கொண்டிருக்கும் ஐக்கியத்திற்கும், கிறிஸ்துவே நம்முடைய சகோதரராகவும் இருப்பதற்கான ஆதாரம். ஆண்டவர் இயேசு யோர்தானில், சகலவிதமான மனித உரிமைகளையும் விட்டுக்கொடுத்தார். அதுபோல, நாம் நம்மை அர்ப்பணித்து, தேவனால் அங்கீகரிக்கப்படும்போது, யோர்தானாகிய மரணத்திற்குள் பிரவேசித்து, மனித வாழ்க்கை மற்றும் அதின் சுதந்தரத்தைக் கடந்தால் மட்டுமே இராஜ்யத்தில் பங்கடைய முடியும்.

வருங்காலத்தில் கிறிஸ்துவின் (அபிஷேகிக்கப்பட்ட) சரீர அங்கத்தினராக இருப்பதற்கு, நமக்குள் தங்கியிருக்கும் தேவனுடைய ஆவியே, அவருடைய அங்கீகாரத்தை நாம் பெற்றிருப்பதை காண்பிக்கிறது. நமக்குள் வாசமாயிருக்கும் அதே தேவ ஆவியினால், நாம் புது சிருஷ்டிகளாக மாறி, தெய்வீக நிலையில் தேவனுடைய கிறிஸ்துவாக, இயேசுவோடு நெருங்கிய ஐக்கியத்தின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரம் விசுவாசத்தின் ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும். விசுவாசத்தினால் மட்டுமே நாம் தேவனோடு கொண்டுள்ள சமாதானத்தையும், நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் மகிமையான நம்பிக்கையில் பங்கேற்பதையும் உணரமுடியும்.

தேவனுடைய ஆவி நுழைவதற்கு, விசுவாசமே நம்முடைய சிந்தனைகளையும், இருதயங்களையும் திறக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும் ஆசீர்வாதங்களையும் கிறிஸ்துவின் சாயலில் பங்குபெறுவதற்கான

வல்லமைகளையும் பெற்றுக்கொள்வதற்கு இந்த தேவ ஆவி வழியாக உள்ளது. வாசமாயிருந்த இந்த தேவ ஆவி, நம்முடைய ஆண்டவரின் கிரியைகளுக்குச் செயல் நோக்கமளித்து அவரைப் பின்பற்றச் செய்து அவருடைய சாயலுக்கு ஒத்திருக்கச் செய்தது. அதே ஆவி நம்மை கட்டுப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும்.

ஆவி வாசமாயிருப்பதற்கான முக்கியத்துவத்தையும், வலியுறுத்தலையும் பற்றிக் கொள்வதற்கு பவுல் வழிநடத்தப்பட்டார். ஆவியின் நினைப்பூட்டுதலுக்கு ஏற்றவாறு நம்முடைய வாழ்க்கை நடத்தப்படுகிறது. நீதியின் பிரமாணத்தை நாம் நிறைவேற்றுகிறோம் (ரோமர் 8:4), மனசாட்சியின் வழியாகச் செயல்படும் ஆவி, சரி என்ற காரியங்களை முயற்சி செய்ய ஊக்குவித்து தேவனுடைய சித்தம் செய்வதினால் மாம்சத்தின் விருப்பங்களையும், சித்தங்களையும் செயல் இழக்கச் செய்கிறது. தேவனிடத்தில் தன்னை அர்ப்பணித்த யாரொருவர், ஆவிக்கும் மாம்சத்திற்கும் இடையில் நடக்கும் போராட்டத்தின் போர்க்களத்தை உணராதிருக்கிறார்களோ, அவர்களுடைய அர்ப்பணிப்பில், ஏதோ ஒரு குறைவுப்பட்டிருப்பதை உணரலாம்.

நம்மைச் செயல்படுத்துவது ஆவியே என்பதற்கான ஆதாரத்தை ரோமர் 8:5-ஆம் வசனம் குறிப்பிடுகிறது. "அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்."

அவருடைய வார்த்தையிலுள்ள கட்டளைகளை உற்று கவனிப்பதற்கு, நம்மை நினைப்பூட்ட தேவன் அவருடைய ஆவியின் வழியாக மனசாட்சியின் குரலினால் நம்முடைய சிந்தையில் பேசுகிறார். அதைக் கீழ்ப்படிவதற்கு நாம் முயற்சிக்கும்போது, நாம் அந்த ஆவியைப் பின் தொடர்ந்து ஜீவனுக்குரிய உறுதியைப் பெற்றுக்கொள்கிறோம். சுட்டிக்காட்டப்பட்டபடி ஒன்பதாம் வசனத்தில் — ஒருவர் கிறிஸ்துவின் ஆவியைப் பெறாவிட்டால் — அபிஷேக ஆவியைப் பெறாவிட்டால் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய புத்திரராக இருக்க முடியாது.

"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11). மரித்துப்போன உங்களது சரீரத்தை உயிர்ப்பிப்பதற்கு, அவருடைய சித்தத்தை மெய்யார்வத்தோடு செய்வதற்கு தேவன் உங்களை கடும் முயற்சி செய்வதற்கு ஏவுகிறார்.

தேவனுடைய பிள்ளைகள்

# ஆவியின் சாட்சி

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்" (ரோமர் 8:16).



David Stein

நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணையில் சாட்சிகளின் ஆதாரத்தின் வழியாக உண்மையான காரியம் ஸ்தாபிக்கப்படுகிறது. ஒவ்வொருவருடைய ஆதாரங்களில் குறிப்பிடப்பட்ட உண்மைகளைச் செயல் விளக்கம் கொடுக்கப்படுமளவுக்கு ஒவ்வொன்றும் கருத்தாய் ஆராயப்படுகிறது. இப்படிப்பட்ட சாட்சிகள் இல்லாமல் குற்றம் தீர்ப்பளிக்க முடியாது. இதன் விளைவாக சாட்சியின் முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

கிறிஸ்துவின் சபை பரலோக நம்பிக்கைக்கு அழைக்கப்படுகிறது. அந்த இலக்கை அடைவதற்கான ஆயத்தத்தில், ஒவ்வொரு அழைக்கப்பட்டவர்களும் புத்திர சுவிகாரத்தைப் பெறுவதற்கு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறோம். ஒவ்வொருவருடைய விசுவாசத்தையும் வலுவாய் பாதுகாப்பதற்கும், அவர்கள் தேவனுடைய குடும்பத்தினர் என்று மெய்ப்பிக்கப்படவும் நம்முடைய பாடத்தின் ஆதார பகுதி குறிப்பிடுகிறபடி உண்மையில் அவர்களுக்கு ஒரு சாட்சி கொடுக்கப்படுகிறது.

இது ஒரு வல்லமையான வாக்குத்தத் தமாகும். ஜெநிப்பிக்கப்பட்ட அதே பரிசுத்த ஆவி, கிறிஸ்துவின் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தின் புத்திர சுவிகாரத்திற்கும் சாட்சி கொடுக்கிறது. அதற்கு முந்தய வசனம், "அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" (ரோமர் 8:15). இந்தச் சிந்தையோடு தொடர்புடையதாக உள்ளது. கிங் ஜேம்ஸ் வர்ஷனில் "தத்தெடுப்பது" (adoption) என்ற வார்த்தையைக் காட்டிலும் அதிக வல்லமையாக "புத்திர சுவிகாரம்" (sonship) என்ற வார்த்தை புதிய மொழிபெயர்ப்பில் காணப்படுகிறது. இதற்கான கிரேக்க வார்த்தைக்கு, "ஒரு குமாரனை ஏற்படுத்து," அதாவது "தத்தெடுப்பது" அல்லது குடும்பத்தில் ஒரு பொறுப்புள்ள ஸ்தானத்தை வளர்ச்சியடைந்த ஒரு புத்திரனை பதவி அமர்த்துவதே அதன் பொருளாகும். இரண்டாவதாகச் சொல்லப்பட்ட காரியமே இங்கு பொருள்படுகிறது.

ஆனால் நாம் எதை எதிர்பார்த்திருக்க வேண்டும்? இந்த சாட்சி எந்த வடிவங்களை எடுத்துக்கொள்ளும்?

பரலோக பிதாவின் கோணத்திலிருந்து நாம் காணும்போது, நாம் அறிந்துகொள்வதற்கான ஏதோ சில காரியங்கள் உண்டு. தேவன் மிகுந்த அன்பும், இரக்கமும் உள்ளவராக இருப்பதினால் நம்முடைய அழைப்பை அவர் தெளிவாக உணரும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். இந்த விஷயத்தில் நம்முடைய மனம் சமாதானமாக இருக்க வேண்டியது மிக அவசியம். தேவனோடு நாம் கொண்டுள்ள நம்முடைய தொடர்பைப் பொறுத்தவரையில் நிச்சயமில்லாமலும், குழப்பமான ஒரு நிலை தொடர்ந்தால் நமக்குள் எப்போதும் சமாதானம் காணப்படாது. இந்தக் குறிப்பைப்பற்றி "தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்" (1 கொரிந்தியர் 14:33) என்று பவுல் குறிப்பிடுகிறார். "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:7). நம்முடைய புத்திர சுவிகாரத்திற்கு அதிகமானதும், தெளிவான சாட்சிகளையும் தருவார் என்பதை நாம் நிச்சயித்து நம்பிக்கொண்டிருக்கலாம்.

ஆயினும் நாம் காணக்கூடிய அநேக காரியங்கள், தேவனுக்காக நாம் கொண்டுள்ள அன்பு மற்றும் நம்முடைய குணலட்சணங்களையே சார்ந்திருக்கிறது, தேவனுடைய அழைப்பு, நல்லுணர்வு, சந்தோஷமான மனநிலை அல்லது மற்ற அகமகிழக்கூடிய சூழ்நிலையோடு, சமப்படுத்துவது கிறிஸ்துவ மண்டலத்தின் வழக்கம். ஆனால் இந்த ஒரு எதிர்பார்ப்பு வேதத்தின்படி சரியா? நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட அனுபவங்களில் உணர்வுகள் மாறக்கூடியதும், பொதுவாக நம்ப முடியாததுமாக இருக்கும் காரணத்தால் நம்முடைய உணர்வுகள் பங்கெடுக்கும்போது, தேவனுடைய சித்தம் இன்னதென்று அதிகாரமாக ஆணையிடுவதற்கு அனுமதிக்கக்கூடாது. உணர்வுகள் இல்லாமல், ஆவியின் சாட்சியை ஒருவரால் எவ்வாறு அடையாளங்கண்டுகொள்ளமுடியும்?

**முதலில் தேவன் நம்மை இழுத்துக் கொள்ள வேண்டும்:**

நாம் தேவனுக்காகக்கொண்டிருக்கும் உணர்வுகளைக் கருத்தில்கொண்டு துவங்கலாம். "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்" (யோவான் 6:44) என்று இயேசு கூறினார்.

நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்துப்பார்க்க இந்த ஒரு கோட்பாட்டைப் பயன்படுத்தலாம். பிதா நம்மை இழுத்துக்கொண்டாரா? கிறிஸ்துவும் அவருடைய உபதேசங்களையும் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட அனுபவங்களை நாம் பெற்றுள்ளோமா? தேவனுடைய ஊழியத்திற்கு தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த யாவரும் இந்த அனுபவத்தைப் பெற்றிருப்பார்கள். தேவனோடு நடக்க துவங்குவதற்கு இது மிக அவசியம். பிதாவினால் இழுக்கப்படாமல் ஒருவர் கிறிஸ்துவுக்குள் விசுவாசமாக இருக்க முடியாது. நம்முடைய வாழ்க்கையில் ஆவியின் சாட்சியை மதிப்பிடும்போது தேவனால் இழுக்கக்கூடிய இந்த நிலை துவங்குவதற்கு ஒரு அருமையான இடமாகும். நம்முடைய உரையின் கருபொருள் குறிப்பிடுகிறதுபோல, ஒவ்வொருவரின் விசுவாசத்தை வலுவூட்டுவதற்காகவும், அவர்கள் கடவுளின் குடும்பத்தின் அங்கத்தினர் என்ற மெய்மைக்கான சான்று அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நம்மில் அநேகர் அர்ப்பணிக்கப்பட்டவர்களின் வீடுகளில் வளர்க்கப்பட்டோம்.

நமக்கு நினைவு தெரிந்த நாட்களிலிருந்து, சத்தியம் நம்முடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தது. ஆயினும் தேவனுடைய அன்பின் முக்கியத்துவம் மற்றும் இயேசுவின் ஈடுபலி நம்முடைய இருதயங்களில் ஏற்படுத்தின அச்சு பதிவானது, நம்முடைய ஜீவனை நம்முடைய பிதாவிடம் அர்ப்பணிப்பதற்கு நம்மை நடத்தியது. நம்மில் சிலர் இந்த உலகத்திலிருந்து வந்தோம். இவர்களின் விஷயத்தில் பொதுவாக சத்தியத்திற்கு நம்முடைய கவனத்தைத் திருப்பின அனுபவங்கள் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்திருக்கும்.

நம்முடைய தந்தை எப்படி ஒழுங்கு செய்திருந்தாலும் சரி அது காரியமல்ல, நாம் திரும்பிப்பார்த்தால், நம்மை இழுத்துக்கொண்ட வல்லமையைக் காணலாம். இது ஒரு உணர்ச்சி வயப்பட்ட கருத்து விளக்கமல்ல, மாறாக இது தேவனுடைய அன்பு மற்றும் ஆவியின் துவக்க சாட்சி என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. விசுவாசத்தினால் நாம் பிதாவின் புத்திரர்களாக இருக்கக்கூடிய அழைப்பில் இந்த அறிகுறியை ஏற்றுக்கொண்டோம். உண்மையில் இந்த அழைப்பு நல் உணர்வுகளோடு இணைந்துள்ளது. ஆயினும் இந்த உணர்வுகள் உண்மையான வாழ்கையின் அனுபவங்களின் இடைவிளைவாக உள்ளது. இந்த அனுபவங்கள் நம்முடைய அர்ப்பணிப்புக்கு வழிநடத்துகிறது.

அவர் வாக்குத்தத்தம் செய்ததை அவர் விசுவாசத்தோடு நிறைவேற்றுவார் என்பதை முழுமையாக நம்பி நாம் இளைப்பாறலாம். உடன்படிக்கை செய்ய வேண்டும் என்ற தீர்மானம் உணர்ச்சிவசப்படக்கூடிய காரியத்தைக் காட்டிலும் விசுவாசத்தின் காரியமாக இருக்கிறது. இது நமக்கு மட்டுமல்ல, பரலோக பிதாவுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது,

நாம் தேவன்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தையும், அன்பையும், அர்ப்பணிப்பையும் ஞானஸ்நானத்தின் அடையாளத்தின் வழியாக செயல்முறைப்படுத்துவதற்கு, நேரம் வந்தபோது கீழ்க்காணும் மூன்று கேள்விகளுக்கு "ஆம்" என்று பதிலளிக்கலாம்.

(1) ஆதாமுக்குள் மரணத்தீர்ப்பைப் பெற்றதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? (1 கொரிந்தியர் 15:22)

(2) உங்கள் விழுந்துபோன நிலைக்கும், உங்கள் பாவங்களுக்கும், இந்த முழு உலகத்தின் பாவங்களுக்கும் இயேசுவை ஈடுபலியாக ஏற்றுக்கொள்வீர்களா? (1 தீமோத்தேயு 2:6)

(3) தேவனோடு செய்த உடன்படிக்கையில் கொஞ்சங்கூட ஒதுக்கி வைக்கப்படாமல், உங்கள் முழு இருதயத்தையும் கொடுத்துவிட்டீர்களா? (ரோமர் 12:1)

நாம் தேவனுக்குப் பணி செய்ய துவங்கும்போதே வெற்றிகள் மற்றும் தோல்விகள் இரண்டிலும் நம்முடைய செயல்கள் பரிபூரணமாக இல்லை, இனியும் இருக்காது. நம்முடைய தோல்விகளில் நாம் எவ்வாறாகப் பணி செய்திருக்க முடியும் என்று நாம் ஆச்சரியப்பட்டிருக்கலாம். இப்படிப்பட்ட அபூரணமான பணியை அவர் எவ்வாறு ஏற்றுக்கொள்வார்? நாம் பெற்றிருக்கும் புத்திர சுவிகாரத்தின்மேல் நமக்கே சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

நாம் மண் என்பதை தேவன் உணர்ந்திருக்கிறார் (சங்கீதம் 103:14). நம்முடைய அபூரண நிலையினால் நாம் அவருக்கு ஏறெடுக்கும் பணிகளில், மாறிமாறி தோல்விகள் வரும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆனால் தேவனுடைய ஒவ்வொரு ஊழியக்காரனும் இப்படிப்பட்ட வழியைக் கடக்க வேண்டும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். மேலும் தேவன் நமக்குச் சோதனையான சூழ்நிலைகளை அனுபவிப்பதற்கு அனுமதிப்பார்.

ஆனால் உண்மையில் இந்த சோதனை, நம்முடைய புத்திரசுவிகாரத்திற்கான ஒரு சாட்சியாகும். பவுல் மற்றும் இயேசுவின் சாட்சிகளை நாம் பெற்றிருக்கிறோம். "என்னில் கனி கொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்" (யோவான் 15:2). "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோலஉங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள், நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே" (எபிரெயர் 12:6-8).

சோதனையில், களை நறுக்குதல் மற்றும் செப்பனிடுதல் - புத்திரசுவிகாரத்தின் ஒரு நிச்சயமான அறிகுறியாகும். அந்தச் சோதனையின் பலனில் தேவன் ஆர்வமுடையவராக இருக்கிறார். அதற்குச் சமமாக அதை நோக்கியிருக்கும் நம்முடைய மனப்பான்மையை உன்னிப்பாகக் கவனிக்கிறார். அந்தச் சோதனையின் விளைவுகள் என்னவாக இருந்தாலும் சரி -- நாம் அவருடைய பணிகளில் முழுவதும் ஈடுபடுத்துவதிலும் மற்றும் அவருடைய விசுவாசமுள்ள குமாரர்களாக இருக்கும் விருப்பத்தை ஏதாகிலும் -- நிலைமாற்றம் ஏற்படுத்துமா என்பதை அவர் கூர்ந்து கவனிப்பார்.

### யேகோவா தேவனோடு தனிப்பட்ட தொடர்பு:

தேவ ஆவியின் சாட்சிக்காக நாம் காணக்கூடிய மற்றொரு பகுதி ஜெபம். தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய தந்தையோடு தொடர்புகொள்ளக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். அவருடைய பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்குச் செவிகொடுப்பதில் தேவன் மகிழ்ந்திருப்பார். தேவனுடைய பிள்ளைகளாக இருக்கக்கூடிய நமக்கு வளமிக்க ஜெப வாழ்க்கை இருக்க வேண்டும். நம்முடைய ஜெபங்களில், நன்றிகளும், துதிகளும், ஜீவனுக்குரிய காரியங்களில் வழிநடத்துதலுக்கான விண்ணப்பங்களும் மற்றும் நம்முடைய சகோதரர்களுக்கான விண்ணப்பங்களும் காணப்பட வேண்டும்.

தேவன் அவருடைய அன்பு மற்றும் அக்கறையை நம்முடைய ஜெபங்களுக்கான பதிலில் வெளிப்படுத்துகிறார். நம்முடைய புத்திரசுவிகாரத்திற்கு இதுவே சிறந்த மகிழ்ச்சிகரமான சாட்சியாகும். நன்மையானதும், சரியானதுமான காரியங்கள் மற்றும் தேவன் நமக்குத் தருவதாக வாக்களித்தக் காரியங்களையும் நாம் நம்முடைய அன்புள்ள தேவனிடம் விண்ணப்பித்து அதற்கான பதிலை நாம் பெற்றுக்கொள்ளும்போது அதுவே நம்முடைய விசுவாசத்தைச் சிறந்த முறையில் பலப்படுத்துவதாகும். "அவருடைய சித்தத்தின்படி கேட்க வேண்டும்" என்ற நிபந்தனையை மட்டுமே நாம் பெற்றிருக்கிறோம் (1 யோவான் 5:14). அவருடைய சித்தத்தின்படி நாம் கேட்காவிட்டால், நமக்குப் பதில் கிடைக்காது. விசுவாசத்தோடு விண்ணப்பிக்க வேண்டும் (யாக்கோபு 1:6). மேலும் அவர் பதிலளிப்பார் என்று நம்ப வேண்டும் (மாற்கு 11:24).

தேவன் நம்முடைய ஜெபத்திற்கு அளிக்கும் பதில், நம்முடைய புதிய சிருஷ்டியை தைத்து, உருவாக்கும் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு மூன்று வழிகளில் பதிலளிப்பார். அவை:- இல்லை, இப்போது இல்லை, அல்லது ஆம். ஒவ்வொன்றும் நம்முடைய ஆவிக்குரிய தேவைகளுக்கு மிகவும் அவசியமானதால், ஒவ்வொரு பதிலும் நம்முடைய புத்திரசுவிகாரத்தை வெளிப்படுத்தும் காரியமாகக் கருதப்படுகிறது.

"இல்லை" என்ற பதிலை கருத்தில் கொள்ளலாம். "மாம்சத்திலுள்ள ஒரு முள்ளை" எடுத்துப்போடும்படி பவுல் தேவனிடம் ஜெபித்தார் (2 கொரிந்தியர் 12:7). உண்மையில் அது என்ன என்பதைக் குறித்து நாம் அறியோம். ஆனால் அவருடைய பார்வையற்ற நிலையைக்குறித்து ஜெபித்ததாக பல விமர்சகர்கள் சிந்திக்கிறார்கள் -- ஒருவேளை இது அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கத்தில், இயேசுவினால் பார்வை இழந்ததின் விளைவாக இருந்திருக்கக்கூடும். எதுவாக இருந்தாலும் சரி, அவருடைய துன்பத்தைத் தனிக்கும்படிக்கு அவர் மூன்று வெவ்வேறு

தருணங்களில் விண்ணப்பித்தார். ஆனால் ஒவ்வொரு முறையும் "இல்லை" என்பதே பதிலாக இருந்தது. அதைக்குறித்து அவர் எழுதும்போது;-

"அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாத படிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது, அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன், அதற்கு அவர் என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன், அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனா யிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்க ளிலும் நான் பிரியப்படுகிறேன்" (2 கொரிந்தியர் 12:7-10).

பவுலின் விருப்பத்தினால் அந்த "முள்" தங்கியிருந்தது. இதினிமித்தமாக இந்தக் குறை இருந்தபோதிலும், பவுலை பூரணப்படுத்தி, தேவன் விரும்பிய காரியங்களை முழுமையாக நிறைவேற்றி, தேவனுடைய கிருபை அதனுடைய வல்லமையை ளிெப்படுத்தியதால் பவுல் இந்தப் பாடத்தை நன்கு கற்றுக்கொண்டார். ஆனால் ஒரு ஜெபத்திற்கு, "இல்லை" என்ற பதிலுங்கூட புத்திரசுவிகாரத்தின் வல்லமையுள்ள ஒரு வெளிப்பாடாக உள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். நம்முடைய நித்தியமான விருப்பங்களை தேவன் மனதில் கொண்டிருப்பதை இது காண்பிக்கிறது. மேலும் கிறிஸ்துவுக்குள் நம்முடைய குணங்கள் வளர்ச்சியடைவதற்கு, தேவன் நம்முடைய அனுபவங்களை ஏற்பாடு செய்கிறார். அது மிக பயங்கரமானதாகவும் இருக்கலாம்.

ஜெபத்திலுள்ள இரண்டாவது பதில், "இப்பொழுது இல்லை" அல்லது "காத்திரு" என்பதும் அதுபோலவே ஒரு பதிலாகும்! இயேசு பரமேறிய பின் வாக்களிக்கப்பட்டதைப் பெற்றுக்கொள்வதற்கு சீஷர்கள் மேல்வீட்டு அறையில் "காத்திருந்தார்கள்" (அப்போஸ்தலர் 1:4). விசுவாசத்தை வளரச் செய்வதற்கு, "காத்திருப்பது" ஒரு அற்புதமான வழியாகும். தேவன் வாக்களித்ததை குறித்த காலத்தில் கொடுப்பார் என்பதை நாம் நம்புகிறோம். அவருடைய இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவதற்காக நாம் காத்திருக்கிறோம், நாம் ஜெபங்களுக்கான பதிலுக்காகக் காத்திருக் கிறோம். சோதனைகளிலிருந்து விடுதலைப்பெற காத்திருக்கிறோம். நம்முடைய பிதா வாக்களித்ததினாலே ஒவ்வொரு விஷயத்திலும் நமக்குப் பதில் கிடைக்கும் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இச்சமயம் பதிலுக்காக நம்மை ஆயத்தப்படுத்துவதற்கு அனுபவங்கள் நம்மை நடத்துகிறது. இறுதியாக, பதில் கிடைக்கும்போது, எவ்வளவு அற்புதமாகவும் வியக்கத்தக்கதாகவும் இருக்கிறது!

ஜெபத்திற்கான மூன்றாவது பதில், "ஆம்" என்பதாகும். விண்ணப்பத்திற்கான உடனடியாக தேவன் "ஆம்" என்று பதிலளிக்கும்போது பதில் பெறும் நமக்கு மெய்சிலிர்த்துவிடுகிறது! இயேசுவோடு நடக்கக்கூடிய நடையில் இந்தப் பதில் வழக்கத்திற்கு மாறானது அல்ல. இது விசுவாசத்தை எவ்வாறாக வளர்ச்சியடையச் செய்கிறது! இந்த "ஆம்" என்ற பதில் பெரும்பாலும் நம் அன்புள்ள பிதாவினிடமிருந்தே வருகிறது என்று விசேஷித்த சந்தர்ப்பங்களில் தெளிவாக தெரிந்துகொள்ள முடிகிறது. எனவே இந்த பரிசுத்த ஆவியே, நம்முடைய புத்திரசுவிகாரத்திற்கு மற்றொரு வியப்பூட்டும் வகையில் சாட்சிக்கொடுக்கிறது.

நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கும்போது, நாம் அறிவில் வளர்ச்சியடைகிறோம். இந்த அறிவின் வளர்ச்சி, ஆவியின் மற்றொரு சாட்சியாகும். இந்த வளர்ச்சியை அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். "பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான், பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபிரெயர் 5:13, 14).

சத்தியத்தின் அறிவில் நீங்கள் முன்னேற்றம் அடைந்தால், அந்த முன்னேற்றம் உங்கள் புத்திர சுவிகாரத்திற்கான ஒரு வெளிப்பாடாகும். தேவனால் அழைக்கப்படாதவர்கள் பலமான ஆகாரத்தைக் கைப்பற்றுவதில்லை. ஆனால் அவருடைய குமாரர்களுக்கு இது ஒரு இயல்பான செயலாக உள்ளது. நீங்கள் அறிவில் வளர்ச்சியடைந்தால், நீங்கள் ஆழமான சத்தியத்தையும் தேவனுடைய வார்த்தைகளின் பல மூலகூறுகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளையும் காண்பீர்கள். அது உங்களை மெய்சிலிர்க்க வைக்கும். தேவனுடைய சித்தத்தின் ஆழமான அம்சங்களையும் நன்கு புரிந்து கொள்வதற்கு இந்தப் பரிசுத்த ஆவி உங்கள் சிந்தை மற்றும் இருதயத்திலும் கிரியைச் செய்கிறது.

**மேற்கொள்ளுதல்:**

நம்முடைய வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் தெய்வீக செயலை கடைசி பகுதியாக நாம் கவனிக்கலாம். இதற்காக நமக்கு பரிச்சயமான ஒரு வேதப்பகுதியை காணலாம். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28).

ஆட்சி எல்லையின் நல்வாய்ப்புக்குள், சில காரியங்கள் நடப்பதற்கான நம்பக்கூடிய தன்மை உண்டு, இயல்பாக நிகழக்கூடாத மற்ற காரியங்களும் உண்டு. நிகழக்கூடாத ஒரு சம்பவத்தை நாம் அனுபவித்தால், அந்த அனுபவங்கள் எதிர்பாராத வழியில் காலத்திற்குரியவைகளும், இன்றியமையாதவைகளுமாக இருக்கும்போது, நம்முடைய பிதாவின் கரங்கள் நமக்காகவும், நம்முடைய சகோதரர்களுக்காகவும் கிரியைச் செய்வதைக் காணலாம்.

இடுக்கமான வழியில் நடக்கக்கூடிய அனைத்து ஆண்டவரின் ஜனங்களும், தேவனுடைய ஆவி இவ்வாறாக கிரியைச் செய்வதைக் கண்டிருப்பார்கள். அடிக்கடி, அனுபவத்தின் காலளவு, பொருத்தமானதாக இருக்கும் -- தேவைப்படும்போது சில காரியம் நடைபெறும் அல்லது ஒருவேளை நாம் ஆசீர்வாதமாக இருப்பதற்கு அல்லது ஓர் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு அனுமதிக்கும்படியாக நமக்கு ஓர் எதிர்பாராத போராட்டம் நேரிடும்.

சகல காரியங்களும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே தேவன் நடத்துகிறார். "தேவனிடத்தில் உண்மையாக அன்பு கூறுகிறவர்களுக்கும்," "அவருடைய நோக்கத்திற்கு ஏற்றவாறு அழைக்கப்பட்டவர்களுக்கும்" இது ஒரு விசேஷித்த ஆசீர்வாதமாகும். நம்முடைய புத்திர சுவிகாரத்திற்கு இது ஆவியின் மற்றொரு சாட்சியாகும்.

அந்தக் கட்டுரையை நாம் ஒரு நீதிமன்ற விசாரணையைக் குறிப்பிட்டு துவங்கினோம். இப்பொழுது நாம் அந்த விசாரணைக்குத் திரும்புவோம்.

சகல ஆதாரங்களும் கூட்டிச்சேர்க்கப்பட்டப் பின் அந்த வழக்கின் உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரலாம். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒருவர் இந்த ஆதாரங்களை, தங்களுடைய வாழ்க்கையில் கண்ணோக்கினால், தேவன் அவர்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார் என்ற முடிவுக்குக் கட்டாயமாக வந்துவிடுவார்கள்.

இப்படிப்பட்ட சாட்சிகள் எந்தளவில் நாம் பெற்றிருந்தாலும், நாம் பெற்ற புத்திரசுவிகார ஆசீர்வாதத்தில் மகிழ்ச்சியடையலாம். தேவன் தம்முடைய சொந்த அழகும் பரிபூரணமான குணத்திற்கும், சாயலுக்கும், நம்மை உருவாக்குவதற்கு, அவர் செய்யக்கூடிய கிரியைகளினால், மறுரூபமாக்கப்படுவதற்குப் புத்திரர்களாகிய நாம் எதிர்நோக்கிக்கொண்டிருக கலாம்.

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரிந்தியர் 3:18).

நம்மையே தேர்வாய்வு செய்தல்

# நாம் நம்மை கூர்ந்து ஆராயலாம்



paul Mali

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள், உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்" (2 கொரிந்தியர் 13:5).

மாம்சத்தில் இருக்கும் வரையில், எந்த கிறிஸ்தவரும் இப்படிப்பட்ட உயர்ந்த இலக்குகளைப் பரிபூரணமாக அடையாமறற்போனாலும், இடுக்கமான வழியில் நம்முடைய வளர்ச்சி பயனுள்ள அளவில் காணப்படுகிறது.

(1) ஆவிக்குரிய பசி (மத்தேயு 5:6).

(2) தேவனால் தீயதென்று அறிவிக்கப்பட்ட சகல காரியங்களுக்கு உள்ளான வெறுப்பு (யாக்கோபு 4:4).

(3) ஒருவர் தாம் மறுரூபமாவதற்கு உணர்ச்சி முனைப்புடைய முயற்சிகள் (ரோமர் 12:1,2).

(4) தேவனுடைய சத்தியத்தை மற்றவர்களோடு கட்டாயமாகப் பகிர்ந்துகொள்ளுதல் (ஏசாயா 61:1).

(5) தெய்வ செயலான அனுபவங்கள் (ரோமர் 8:28).

(6) கிறிஸ்துவோடும் அவருடைய சகோதரரோடும் அன்பான ஐக்கியம் (1 கொரிந்தியர் 1:9).

(7) தேவனுடைய சகல சத்தியங்களிலும் தீவிரமான ஆர்வம் (1 கொரிந்தியர் 2:14; எபிரெயர் 5:13, 14).

(8) பாடுகள் பட்டாலும், மற்றவர்களுக்குக் கொடுத்து, பலிசெலுத்துதல் (யோவான் 3:16-18; பிலிப்பியர் 2:3, 4).

(9) தேவனோடு அன்றாட தொடர்பு (1 தெசலோனிக்கேயர் 5:17).

(10) தேவனுடைய சித்தஞ்செய்ய உறுதியான விருப்பம் (சங்கீதம் 40:8).

(11) நித்தமும் ஆவிக்குரிய காரியங்களை முக்கியத்துவப்படுத்துவது (ரோமர் 8:6; கொலோசெயர் 3:1-3).

(12) தம் வாழ்வில் தேவன் நுழைந்துவிட்டார் என்பதை பிறர் அறிய வேண்டுமென்ற விருப்பம் (அப்போஸ்தலர் 20:20).

(13) வேத படிப்பின் வழியாக சத்தியத்தில் உறுதிப்படுவதை நாடுதல் (2 தீமோத்தேயு 2:15).

(14) தேவனிடத்திலிருந்துவரும் ஒழுங்கின் வரவேற்பு (எபிரெயர் 12:6).

(15) தேவனுடைய பிரமாணத்திற்கு, மனப்பூர்வமாகப் பாவஞ்செய்ய இயலாமை (1 யோவான் 5:18).

(16) கூடுமானவரையில் எங்கு வேண்டுமானாலும் தேவனுடைய கோட்பாடுகளை செயல்முறைப்படுத்தல் (1 கொரிந்தியர் 3:10, 11; 2 பேதுரு 1:5-11).

(17) தாலந்துகளை வளர்ச்சி செய்வதற்கான வேலைகள் (1 கொரிந்தியர் 12:4-11).

(18) ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட மற்றவர்களிடம் ஐக்கியங்கொள்வதற்கு உறுதியான விருப்பம் (எபிரெயர் 10:24, 25).

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன், நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரிந்தியர் 11:28, 31).

கதைகளின் வழியாகக் கற்பித்தல்

# தனிப்பட்ட உடன்படிக்கைக்குரிய உவமைகள்


Jeff Mezera

"அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள்" (மத்தேயு 13:10).

வாய்மொழியாகச் சொல்லப்பட்ட இந்த மூன்று சுவிசேஷங்களிலும், இயேசு சொன்ன உவமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. யோவான் சுவிசேஷத்தில் இது உள்ளடக்கப்படவில்லை. ஆயினும், இயேசு திராட்சச்செடி மற்றும் கொடிகள், ஜீவ அப்பம், அநேக வாசஸ்தலங்கள், நல்ல மேய்ப்பனின் பாடம், வாசல் மற்றும் மந்தைபோன்ற தன்னுடைய உபதேசங்களை அறிவிப்பதற்கு பல உருவகங்களைப் பயன்படுத்தினதாக யோவான் பதிவு செய்திருக்கிறார்.

**நல்லது, உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே, தாலந்துகள், (மத் 25:14-30)**

நாம் ஒவ்வொருவரும் பெற்ற தாலந்துகளுக்குத் தனிப்பட்ட முறையில் கணக்கு கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறோம் என்று இயேசு சொன்ன தாலந்துகளின் உவமையிலிருந்து நாம் உணர்ந்துகொள்கிறோம். ஊழியக்காரர்கள் பெற்ற தாலந்துகளை விருத்தியாக்க வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்த்தார். துவக்கத்திலிருந்து நம்பிக்கைக்கொண்டிருந்த எஜமான், படிப்படியாக முன்னேற்றத்தில் களிகூர்ந்தார்.

இந்த உவமையை கன்னிகைகளின் உவமையோடு ஒப்பிடுகையில், அந்த கன்னிகைகளுக்கு இடையிலுள்ள வேறுபாட்டை நாம் காணலாம். ஆண்டவராம் இயேசுவுக்காகக் காத்திருந்தவர்கள் மற்றும் அங்கு அவருக்காக ஊழியஞ் செய்துகொண்டிருந்தவர்கள். கன்னிகைகளின் பாடமானது உவமையில் காணப்படும் உள்ளார்ந்த ஆவிக்குரிய வளர்ச்சியைப்பற்றியது, அப்படியிருக்க மற்றொரு உவமை வெளிப்புறமான கிரியைகள் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பற்றியதாக உள்ளது.

வரங்களைப்பற்றிய பவுலின் ஆய்வு கட்டுரையான 1 கொரிந்தியர் 12-ஆம் அதிகாரத்தில், அவர் உபதேசம், போதகம் மற்றும் பல திறமையான வரங்களைப்பற்றிப் பேசுகிறார். அனைவரும் ஒரே தாலந்துகளைப் பெறவில்லை. ஆனால் நாம் அனைவரும் தேவனுடைய வேலைகளைச் செய்வதிலும், அதற்கான வாய்ப்புகளில் ஒருவரையொருவர் ஊக்குவிப்பதிலும் வைராக்கியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய சொந்த நடவடிக்கைகளை நாம் புறக்கணிக்க வேண்டாம். ஏனெனில் ஆண்டவர் இப்போது நம்மேல் வைத்திருக்கும் நம்பிக்கை, வருங்காலத்திலும் தொடர்ந்து நீடித்திருப்பதற்கு. ஆண்டவருக்கடுத்த நம்முடைய சொந்த ஊழியங்களில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்று உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவ பந்தயத்தில் ஓடக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தாலும் அவர்களின் தாலந்துகளை நிலத்தில் புதைத்து வைப்போர், ஆண்டவர் கொடுத்த வரங்களைத் தவிர்க்கக் கூடியவர்களாக இருப்பார்கள். அப்பிரயோஜனமான ஊழியக்காரனிடமிருந்த தாலந்தை வாங்கும்படி எஜமான் கட்டளையிட்டார். இந்த உவமை கிறிஸ்துவின் விசுவாசிகளாக இருக்கக்கூடிய ஊழிய பட்டியலில் இடம் பெறாத விசுவாசிகளாகிய நமக்குப் பொருந்தக்கூடியதாக உள்ளது, (R3870 பார்க்கவும் )

இந்த உவமையில் மற்ற ஆழமானப் பாடங்கள் இருப்பினும், மத்தேயு சுவிசேஷத்தின் முந்தைய அதிகாரத்தில் கேட்கப்பட்ட கேள்விக்குத் தொடர்பான, ஒரு தீர்க்கதரிசனமான பாடமும் உள்ளது. "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்" (மத்தேயு 24:3).

இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதிலும் இந்த உவமையிலுள்ள பொதுவான பாடம் பொருந்தக் கூடியதாக இருந்தாலும், நம்முடைய நாட்களில் ஆண்டவரின் திரும்புதல், விசுவாசமுள்ளவர்களாகக் காணப்பட்டு, தங்களுடைய தாலந்துகளைப் பயன்படுத்தி, தங்களுடைய வெகுமானத்தைப் பெற முயற்சித்து, அடுத்த உவமையில் காணப்படுவதுபோல மனுக்குலத்தோடு வேலை துவங்குபவர்களுக்கு இந்த உவமை ஒரு விசேஷித்த அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய இருக்கிறது (மத்தேயு 25:31-46).

"அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள

ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்" (மத்தேயு 25:21).

### தேவனுடைய அழைப்பு:

**காணாமற்போன வெள்ளிக்காசு லூக்கா 15:8-10 இராஜாவின் குமாரனுக்கு நடந்த கலியாண விருந்து, மத்தேயு 22:1-4; மிகப்பெரிய இராவிருந்து, (லூக்கா 14:16-24)**

காணாமற்போன காசை கண்டுபிடித்த ஒரு ஸ்திரீ தன்னுடைய அயலகத்தாரோடு சந்தோஷமாக இருந்தாள் என்று காணாமற்போன வெள்ளிக்காசு என்ற உவமையில் காண்கிறோம்.

"ஒரு ஸ்திரீ பெத்லெகேமில் விவாகஞ்செய்தால், அவளுடைய மணவாளன் பத்து வெள்ளிக் காசுகளை (துண்டுகள்) திருமண பரிசாகக் கொடுப்பார் அவள் அந்த வெள்ளிக் காசுகளை அவள் அணியும் விசித்திரமான தலைகவசத்திலிருந்து நடுவில் பதக்கம் பதிக்கப்பட்ட செயினில் தொங்க விடுவாள் அவளுடைய சார்பில் எந்தவிதமான கவனமின்மையும், தன் கணவன்மேலுள்ள அன்பும், மதிப்பும், மரியாதையும் குறைவுபட்டதாகவும் எண்ணப்படும் என்ற காரணத்தினால் அதை அவள் ஜாக்கிரதையோடு பாதுகாத்துக்கொள்வாள். தொலைந்துபோன காசைக்கொண்டு வேறு ஒரு காதலனை அவள் விலைக்கு வாங்கினாள் என்று எண்ணி, அவளுடைய சொந்த மணவாளன் விவாக ரத்துகூட செய்துவிடலாம்."

"இந்த வெள்ளிக்காசுகள், யூதர்களினால் புனிதமாக எண்ணப்படுகிறதினால், அவைகள் கடனுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மனைவியானவள், இந்தப் பணத்தை, தன்னுடைய விதவையின் நிலையில் மட்டுமே தேவைக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். தொலைந்துபோன வெள்ளிக்காசைப்பற்றி கிறிஸ்து சொன்ன உவமை, இந்தப் பத்து வெள்ளிக்காசுகளில் ஒன்றாக இருக்க வேண்டும். அந்த வெள்ளிக்காசு தொலைந்து போன பின் அந்த ஸ்திரீ அடைந்த கவலைகளையும், வேதனைகளையும், அதைக் கண்டுபிடித்த பின் அவள் மகிழ்ச்சியாக காணப்பட்டதின் நோக்கங்களை இப்பொழுது நாம் சரியாகப் புரிந்துகொள்ள முடிகிறது. " (Strange Scriptures that Perplex the Western Mind, Barbara Bowen, Erdmans, 1953, pages 37-38).

தேவனோடு ஒப்புரவாக்கப்பட்ட நாம் ஆடுகளை போஷிப்பது மற்றும் ஆண்டவர் முன்னதாகவே கண்டுபிடித்தவர்களுக்கு உதவிசெய்வது மிக முக்கியம் என்றும் நாம் அறிந்துகொள்கிறோம். ஆயினும் நாம், பெற்றிருக்கும் அழைப்பிற்கு உண்மையாகக் காணப்பட்டு, நாம் பெற்ற வரங்களை விரயமாக்காமல் இருப்பதும் அவசியம். ஆகவே ஆண்டவர் கொடுத்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை உறுதியாகப் பற்றிக்கொண்டு நீங்கள் சந்திக்கும் அனைவரிடமும் பகிர்ந்துக்கொண்டு, நீங்கள் கண்டுபிடித்த சத்தியங்களை உங்கள் அயலகத்தாரோடு மகிழ்ச்சியாக இருங்கள்.

"நான் தேவனுடைய ஆவியைப் எவ்வளவு பெற்றுள்ளேன்? என்னுடைய சகோதரர்களின் பிரச்சனைகளில் உதவிசெய்யவும், அவர்களின் சோதனைகளில் அவர்களை தேவனிடமாய் கொண்டுவந்து சேர்க்கவும் நான் எவ்வளவு நேரத்தைச் செலவளிக்கிறேன்? தொலைந்துபோன ஆடுகளுக்குப் பின் செல்வதற்கு எவ்வளவு நேரத்தையும் பலத்தையும் நான் பலி செலுத்துகிறேன்? இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்" (R5427).

அந்த ஸ்திரீ தன்னுடைய வீட்டில் அழுக்கடைந்த மூலைகளில் வெள்ளிக்காசை தேடினதுபோல, இயேசுவும் தொலைந்துபோன பாவிகளையும், ஆயக்காரர்களையும் தேடினார். அது போல நம்முடைய வாழ்க்கையை மூடி கொண்டிருக்கும் அழுக்கையும், பாவங்களையும் களைந்து விட்டு ஆண்டவர் நமக்குத் தந்திருக்கும் விலையேற பெற்ற பொன்னான வாக்குத்தத்தங்களை தேட வேண்டும்,

"பக்தியுள்ள இஸ்ரயேலர்கள், வெள்ளிபோல மதிப்பிடப்பட்டார்கள் (லேவியராகமம் 5:15). . . . அர்ப்பணித்த புறஜாதியார் பொன்னாக மதிப்பிடப்பட்டார்கள் (வெளிப்படுத்தல் 3:18)" (The Kingdom of God, Francis B Harris, 1913).

மத்தேயுவில் சொல்லப்பட்ட கலியாண விருந்தைப்பற்றிய உவமைகளும், லூக்காவில் சொல்லப்பட்ட பெரிய இராவிருந்தும், ஒரேவிதமாக இருக்கிறது. ஒன்று பரிசேயரின் வீட்டில் கொடுக்கப்பட்டது. மற்றொன்று ஆலயத்தில் கொடுக்கப்பட்டது. இரண்டு பாடங்களிலும் முதலில் அழைக்கப்பட்டவர்கள், அந்த விருந்துக்கு வராதபடிக்கு சாக்குபோக்குச் சொன்னார்கள். அதற்குப் பின் அந்த எஜமான், வழிகளிலும், வீதிகளிலும் பட்டணத்து சந்தில் இருக்கும் ஏழைகளையும், ஊனமானவர்களையும், முடவர்களையும், குருடர்களையும் அந்த விருந்துக்கு அழைத்தார்.

இந்த இரண்டு உவமைகளும் மூன்று வெவ்வேறு வகுப்புகளைக் கொண்டுள்ளது. மத்தேயுவில் சொல்லப்பட்ட உவமை மூன்று காட்சிகளைக் கொண்டுள்ளது.

• ஒரு இராஜா தன்னுடைய குமாரனுடைய கலியாணத்தைக் கனப்படுத்தும்படியாக ஒரு பெரிய இராவிருந்தைக் கொடுக்கிறார்.

• ஆயத்தங்கள் செய்யப்பட்டு, அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டது, ஆனால் அந்த வேண்டுதல்கள் மறுக்கப்பட்டது.

• கலியாணத்திற்கு வருவதற்கான இந்தப் பெரிதான அழைப்பு மற்ற அநேகருக்குக் கொடுக்கப்பட்டது.

இங்கு மூன்று அழைப்புகள் உள்ளது.

• முதல் அழைப்பு (மத்தேயு 22:2-3).

• இரண்டாவது அழைப்பில் அழைப்பு புதுபிக்கப்படுகிறது (மத்தேயு 22:4-7).

• மூன்றாவது அழைப்பு அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது (மத்தேயு 22:9-10).

மூன்று தடைகள் உள்ளது

• அவர்கள் வரவிரும்பவில்லை (மத்தேயு 22:3).

• அதை இலேசாக எடுத்துக்கொண்டு, அவர்களுடைய சொந்த வழியில் சென்றார்கள் (மத்தேயு 22:5).

• சிலர் கலியாண வஸ்திரத்தை மறுத்தார்கள் (மத்தேயு 22:11).

லூக்காவில் சொல்லப்பட்ட உவமையிலும் மூன்று தடைகள் காணப்படுகிறது.

• நிலம் (லூக்கா 14:18).

• காளை (லூக்கா 14:19).

• குடும்பம் (லூக்கா 14:20).

இந்த உலக முழுவதிலுமிருந்தும், யூத ஜாதிக்கு வெளியே இருந்தும் தேவன் ஒரு சிறுமந்தையை தேர்வு செய்கிறார் என்பதே இங்கு முக்கிய கருத்தாகும் (லூக்கா 12:32). இந்த உவமைகளில் குறிப்பிடப்படும் மூன்று அழைப்புகளும் --

• இஸ்ரயேல் புறக்கணித்த முதல் அழைப்பு (மத்தேயு 22:3).

• "எருசலேம் துவங்கி" அனைவருக்கும் இந்தச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி, இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளைக் கொடுத்ததே இரண்டாம் அழைப்பு (லூக்கா 24:47; அப்போஸ்தலர் 13:46).

• புறஜாதிகளின் அழைப்பே மூன்றாவது அழைப்பை அடையாளப்படுத்துகிறது (மத்தேயு 22:9; லூக்கா 14:23).

இந்த மூன்றாவது அழைப்பு "முதல் geometrical figure" ஆகும். இரண்டு நேர்கோடுகள் எந்த இடத்தையும் சுற்றி சேர்ந்து ஒரு முழுமையான வடிவத்தை உருவாக்க முடியாது. அதுபோல இரு தளங்கள் சேர்ந்து ஒரு திடப்பொருளை உருவாக்கமுடியாது. இதற்கு மூன்று நேர் கோடுகள் அவசியமானது. ஒரு திண்மத்தை உருவாக்க நீளம், அகலம், உயரம் என்ற மூன்று ஒரு கன பொருளையோ அல்லது திண்மத்தையோ அடையாளப்படுத்தும் எண் ஆகும் . . . . காலத்தை முழுமைப்படுத்தவும் மூன்று பகுதிகள் உள்ளன -- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் . . . . ஆகையால், மூன்று என்பது திண்மமானவை, உண்மையானவை, கனிசமானவை மற்றும் முழுமையானவையைக் குறிக்கும் எண்ணாகும்.

மூன்று என்ற எண் முழுமை அல்லது நமக்காக இயேசுவின் முழுமையான பலியின் அடையாளமாகும். இதற்கான சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு --

•வானசாஸ்திரிகள் கொண்டுவந்த பரிசுகள் பொன், வெள்ளைப்போளம் மற்றும் தூபவர்க்கம் (மத்தேயு 2:11).

•இயேசு செய்த முதலாம் அற்புதம், மூன்றாம் நாளில் நடத்தப்பட்டது (யோவான் 2:1).

•கல்லறையில் மூன்று நாட்கள் இருக்கப்போவதாக இயேசு கூறினார் (மத்தேயு 12:39-40; 27:62-64).

•கெத்செமனேயில்இயேசுவோடு மூன்று சீஷர்கள் இருந்தனர் (மத்தேயு 26:37; மாற்கு 14:33).

•போர்ச்சேவகர் வருமுன் இயேசு மூன்று முறை ஜெபித்தார் (மத்தேயு 26:44; மாற்கு 14:32-42).

•இயேசு மூன்று நியாயஸ்தலங்களில் விசாரிக்கப்பட்டார் (ஆலோசனைசங்கம், ஏரோது மற்றும் பிலாத்து மத்தேயு 26:57-68; லூக்கா 22:54-23:25).

•சிலுவையின்மேலுள்ள விலாசம் மூன்று மொழிகளில் எழுதப்பட்டிருந்தது (எபிரெயு, இலத்தின் மற்றும் கிரேக்கு யோவான் 19:19-20 ).

•மூன்றுபேர் சிலுவையில் தொங்கினார்கள் (யோவான் 19:18).

•சிலுவையின் கீழ் மூன்று ஸ்திரீகள் நின்றார்கள் (மூவருக்கும் மரியாள் என்றே பெயர் யோவான் 19:25).

•இயேசு மூன்றாம் மணி வேளையில் சிலுவையில் அறையப்பட்டார். மூன்று மணி நேரத்திற்குப் பின் இருள்

சூழ்ந்தது. அதற்குப் பின் மூன்று மணி நேரத்தில் இயேசு ஜீவனைவிட்டார் (மத்தேயு 27:45, 46, 50; மாற்கு 15:25, 33-34,37).

•இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1 கொரிந்தியர் 15:4).

இந்த மூன்று அழைப்புகளும் எவ்வளவு முழுமையானது என்று இந்த உவமைகளில் தெளிவாகக் காணலாம். இந்தப் புறக்கணிப்பு எவ்வளவு முழுமையானது என்று இந்த மூன்று தடைகளும் காட்டுகிறது. தேவனுடைய அழைப்பு எவ்வளவு முழுமையானது என்று இஸ்ரயேல், எருசலேமிலிருந்த யூதர்கள் மற்றும் புறஜாதிகளுக்குக் கொடுக்கப்பட்ட இந்த மூன்று அழைப்புகளும் காட்டுகிறது.

இந்தக் கலியாணத்திற்கு வரும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்மை நாம் அழைத்துக்கொள்ளவில்லை. நாம் கலியாண வஸ்திரத்தை அணிந்துகொள்வதற்கு மட்டுமல்ல, அவருடைய குணத்தின் பரிசுத்தத்தையும், கிறிஸ்துவின் நீதியையும் தரித்துக்கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம் (ஏசாயா 64:6, 61:10). கலியாண வஸ்திரம் இல்லாதவர்கள் கலியாணத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டார்கள். நாம் இந்த வகுப்பாராக இருக்க வேண்டாம்.

இராஜா விருந்தாளிகளைக் கவனிக்கும் படியாக விருந்து சாலைக்குள் வந்தபோது அங்குக் கலியாண வஸ்திரம் தரித்திராததைக் கண்டுபிடிப்பதோடு இந்தக் கலியாண விருந்தின் உவமை முடிவடைகிறது.

"இல்லை" என்ற "சிறிய வார்த்தை" இரண்டுமுறைகள் காணப்பட்டாலும், இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஒரே அர்த்தமாகக் காணப்படுவதில்லை. முதல் வார்த்தை ou, - இதற்கு அவள் அணியவில்லை என்று பொருள். ஆனால் அதற்கான காரணத்தை இராஜா கேட்கும்போது, அங்கு இயேசு "இல்லை," நான் என்று ஒரு வித்தியாசமான வார்த்தையைப் பயன்படுத்தினார். இதற்கு அவர் அணியவில்லை என்பது மட்டும் பொருளல்ல, மாறாக அந்தக் கலியாண வஸ்திரத்தைச் சொந்த விருப்பத்துடன், நோக்கத்துடன், சிந்தையுடன் அணியவில்லை என்று பொருள் தருகிறதாக அது கருதப்படுகிறது (The Parables and Metaphors of Our God, Campbell Morgan, 1943, page 118).

உவமையின் கடைசி வரியில், நமக்குண்டான பாடம் காணப்படுகிறது. "அந்தப்படியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்" (மத்தேயு 22:14). உலகத்தின் பொக்கிஷம் ஜீவனுக்கு அற்பமானது. அது நம்முடைய ஆண்டவரின் அழைப்பை உணர்ந்து கொள்வதற்கும், அவரைப் பின்பற்றுவதற்கும் நம்மைத் தடுக்கக்கூடாது. நம்முடைய வருங்கால பொக்கிஷம் பரலோகத்தில் இருக்கிறது (பிலிப்பியர் 3:20; கொலோசெயர் 3:1-3). நாம் விழுந்து போனவர்கள் என்றும் நமக்கு கிறிஸ்துவின் நீதி தேவை என்பதையும், நாம் நினைவில்கொள்ள வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கலியாண வஸ்திரத்தை நாம் புறக்கணிக்க வேண்டாம்.

நாம் பெரிதான ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம், ஆனால் நாம் முழுமையாக நம்மை ஆண்டவரிடம் அர்ப்பணித்திருக்கிறோமா? ஆண்டவரையும் அவருடைய ஜனங்களையும் சேவிக்கக்கூடிய நம் வழியில், நுழையக்கூடிய சுயநலம் மற்றும் பெருமையை நாம் நீக்கியிருக்கிறோமா? உண்மையான ஆராதனை மனத்தாழ்மையில் துவங்கும், ஏனெனில் தன்னைத்தான் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான் (லூக்கா 14:11, 18:14).

**பிந்தினோர் முந்தினோர் ஆவார் -- ஒரு பணம் பற்றிய உவமை. திராட்சதோட்டத்தில் வேலைக்காரர்கள், மத்தேயு 19:16-20:1-16**

நித்திய ஜீவனை பெறும்படி நான் என்ன செய்ய வேண்டுமென்று இளைஞனான ஒரு ஐசுவரியவான் இயேசுவிடம் கேட்டபோது, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று பதிலளித்தார். "எந்தக் கற்பனைகளை?" என்று அந்த ஐசுவரியவான் கேட்டார். யூதர்கள் எல்லா பிரமாணங்களையும் கடைபிடிக்க வேண்டியிருந்ததால் இது ஒரு விநோதமான கேள்வியாகத் தோன்றியது. இருப்பினும் இயேசு எல்லா கற்பனைகளையும் சுருக்கமாக வரிசைப்படுத்தி பதிலளித்தார்.

இயேசுவின் வார்த்தைகளுக்குப் பதிலளிக்கும்படியாக, "என் சிறுவயது முதல் இவைகளை நான் கடைபிடிக்கிறேன்" என்று ஐசுவரியவான் கூறினான். ஆனால் அவனுக்குள்ளவைகளை விற்று தரித்திரருக்குக் கொடுக்கும்படி ஆலோசனை கூறியபின், இயேசுவின் வார்த்தைகளை நிறைவேற்ற இயலாதவனாக அவன் சென்றுவிட்டான்.

ஆயினும், "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும்" (மத்தேயு 19:27) என்று அப்போஸ்தலனாகிய பேதுருவினிடமிருந்து கேள்வி எழும்பியது.

பேதுருவின் கேள்விக்கான பதில் மற்றும் ஒரு உவமையை இயேசு கூறினார். "மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்" (மத்தேயு 19:28, 29).

முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் என்று இயேசு சொன்னவைகளின் பொருள் என்ன? எளிமையான பாடம் இதிலுள்ளது. மத்தேயு 19:30-ஆம் வசனத்திலுள்ள இந்த வாக்கியத்தை உடனடியாக தொடர்ந்து, இயேசு பேதுருவுக்கான பதிலை 20-ஆம் அதிகாரத்தில் கூறுகிறார். 19 மற்றும் 20-ஆம் அதிகாரத்திற்கு இடையில் எந்தவிதமான கால அவகாசமுமில்லை - பிந்தினோர் முந்தினோராயும் முந்தினோர் பிந்தினோராயும் - என்ற அதே சொற்றொடரை 19-ஆம் அதிகாரத்தின் முடிவிலும் இயேசு பயன்படுத்தினார்.

20-ஆம் அதிகாரத்தில் இயேசு தொடர்ந்து திராட்சத்தோட்ட உவமையை கூறி பேதுருவுக்கு பதிலளித்தார். தேவனுடைய இராஜ்யம் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்படும் வீட்டெஜமானுக்கு பரலோக இராஜ்யம் ஒப்பாயிருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

திராட்சத்தோட்டத்திற்கு காலையில் வேலைக்கு வந்த ஒரு மனுஷனுக்கு ஒரு நாளுக்கு ஒரு பணம் கூலி கொடுக்க சம்மதித்தார் (மத்தேயு 20:2). மூன்றாம் மணி நேரம், ஆறாம் மணி நேரம் மற்றும் ஒன்பதாம் மணி நேரம் இன்னும் சில வேலையாட்களை வேலைக்கு அமர்த்தி "நியாயமானபடி கூலி" கொடுப்பேன் என்று கூறினார் (மத்தேயு 20:4-5). ஆயினும், பதினோராம் மணி வேளையில், அந்த எஜமான் வெளியில்போய் வேறு சிலரை கண்டு, "நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான், அதற்கு அவர்கள் ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள், அவன் அவர்களை நோக்கி நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான்" (மத்தேயு 20:7).

கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டதுபோலவே, இங்கும் மூன்று வகுப்பாரைப்பற்றி குறிப்பிடப்படுவது ஆர்வமூட்டுகிறதாக இருக்கிறது --

- ஒரு வகுப்பாருக்கு ஒரு பணம் கூலி வாக்களிக்கப்பட்டது.
- ஒரு வகுப்பாருக்கு நியாயமானக் கூலி வாக்களிக்கப்பட்டது.
- ஒரு வகுப்பாருக்கு எதுவும் வாக்களிக்கப்படவில்லை.

அதைக்காட்டிலும் சுவாரசியமான ஒரு காரியம் என்னவெனில், அந்த எஜமான் வேலைக்கு ஆட்களைத் தேடும்படி ஐந்துமுறை வெளியே புறப்பட்டுச் சென்றார். வசனங்களில், ஐந்து என்ற எண் சபையை அல்லது இயேசுவை பின்பற்ற அழைக்கப்பட்ட சபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கிருபையை அடையாளப்படுத்தும். இதற்கான சில எடுத்துகாட்டுகள் --

- மத்தேயு 25, ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள்
- யோவான் 6, ஐயாயிரம் பேர் போதிக்கப்பட்டார்கள்
- ஆதியாகமம் 41:34, யோசேப்பின் தானிய களஞ்சியங்கள் ஐந்தில் ஒரு பாகமாக இருந்தது.
- யாத்திராகமம் 26:27, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் ஐந்து தூண்கள் நிறுத்தப்பட்டன.
- எசேக்கியேல் 40:41, மகிமையுள்ள சபையை அடையாளப்படுத்தும் எசேக்கியேல் ஆலயத்தின் அளவுகள் ஐந்தின் பெருக்காகும்.
- 1 சாமுயேல் 17:40, அந்த இராட்சதனைக் கொல்ல தாவீது ஐந்து கூழாங்கற்களைப் பயன்படுத்தினார்.
- யோபு 38:7; ஏசாயா 14:12; 2 பேதுரு 1:19; வெளிப்படுத்தல் 2:28; 22:16, "அதிகாலையின் விடிவெள்ளி" என்ற சொல் வேதாகமத்தில் ஐந்துமுறைகள் காணப்படுகிறது. "இது முக்கியமாக இயேசுவுக்கும், சாத்தானுக்கும், சபை மற்றும் இந்த

உலகத்தின் மீட்போடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது" (Symbolic Numbers –Their Meaning and Their Evidence for the Canon of Scripture, Jeff Hausmann, 2012, page 11).

அந்த நாளின் முடிவில், திராட்சத்தோட்டத்தில் அனைவரும் வேலைகளை முடித்து தங்களுடைய கூலியைப் பெறுவதற்குக் கூடிவந்தார்கள். கடைசியாக வேலை செய்தவர்களுக்கு எஜமான் முதலில் கூலி கொடுத்தார். எதையும் வாக்களிக்காதவர்களுக்கு அவர் ஒரு பணம் கூலி கொடுத்தார். "நியாயமானக் கூலி கொடுக்கப்படும்" என்று வாக்களித்தவர்களுக்கும் ஒரு பணம் கூலி கொடுத்தார். ஒரு பணம் கூலி கொடுப்பதாக வாக்களித்தவர்களுக்குச் சரியாக ஒரு பணம் கூலி கொடுத்தார்.

முதலில் வந்து, அந்த நாள் முழுவதும் வேலைச் செய்த வேலைக்காரர்கள் வஞ்சிக்கப்பட்டதாக எண்ணினார்கள். அந்த நாள் முழுவதும் அவர்கள் அந்தத் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தார்கள். ஆனால் மற்ற அனைவரும் ஒரு பணம் கூலி பெற்றதை அவர்கள் கண்டார்கள். இது நியாயமா? ஆம், அவர்களுக்கு ஒரு பணம் வாக்களிக்கப்பட்டது. அவர்கள் அதைப் பெற்றார்கள்.

ஒருநாள் முழுவதும் வேலை செய்தவர்களுக்கு மிக நேர்த்தியாகவும் திறமையாகவும், "என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா" (மத்தேயு 20:15) என்று பதிலளித்தார்.

இந்த யுகம் முழுவதும் சபை வகுப்பாருக்கு தேவனுடைய அழைப்பு, அவருடைய கிருபையை எடுத்துக்காட்டுகிறது. விசுவாசமுள்ள யாவரும் அவர்கள் எப்பொழுது அழைப்பு பெற்றிருந்தாலும் சரி அனைவரும் பரிசைப் பெறுவார்கள். யூத பிரமாணத்தைப் பின்பற்றுகிறவர்களும் பரிசைப் பெறுவார்கள். இவர்கள் தேவனால் முதலில் தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் இவர்களும் வாக்களிக்கப்பட்டதைப் பெறுவார்கள். யூதர்கள் முதலில் அழைக்கப்பட்டாலும் இறுதியில் பரிசைப்பெறுவார்கள். (ஆசிரியர் குறிப்பு:- மத்தேயு 19:22-ஆம் வசனத்தில், இந்த உவமையிலிருக்கும் பாடத்தில் இயேசுவை பின்பற்றுவதற்காக சகலத்தையும் விட்டுவந்ததற்கான பரிசைப்பற்றி பேதுரு எழுப்பின கேள்விக்கு பதில் அடங்கும். இந்த உவமையிலிருக்கும் பாடம், மத்தேயு 19:27-ஆம் வசனத்தில் முந்தி இயேசுவைப் பின்பற்றுவதற்காக சகலத்தையும் விட்டுவந்ததற்கான பரிசைப்பற்றி பேதுரு கேட்ட கேள்விக்கான குறிப்பை உள்ளடக்கியுள்ளது. இந்தக் கேள்விக்கான விடை இந்த உவமையில் உடனடியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாக தோன்றுகிறது. இயேசு சீஷர்களுக்கு வாக்களித்த அதே பரிசை அந்த ஐசுவரியமுள்ள வாலிபனுக்கும் வாக்களித்தார். அதற்குப் பேதுரு மாறுத்தரம் கூறினார். அந்த ஐசுவரியவான் [நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருக்கிறேன் என்று கோருகிற இஸ்ரயேலை சித்தரிக்கிறார்] இயேசு சொன்ன நிபந்தனைகளை மறுத்து, பரிசை இழந்தார். இந்தப் பகுதியில் இஸ்ரயேலுக்குப் பங்கில்லை. ஆண்டவரின் திராட்சத்தோட்டத்தில் உண்மையில் வேலை செய்யக்கூடியவர்களைப் பற்றிய காரியமாகும். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு பரிசளிப்பார்). முந்தினவர்களாக இருந்தாலும் பிந்தினவர் களானார்கள். பிந்தினவர்கள் முந்தினவர்களானார்கள். அனைவரும் தேவனுடைய கிருபையைப் பெற்று, பரிசைப் பெறுவார்கள். அதைப் பெறுவதற்கு நாமும் விசுவாசமுள்ளவர்களாக இருப்போம். எவ்வளவு காலமானாலும் சரி உண்மையோடு தேவனுடைய பணியைச் செய்வோம். விசுவாசத்தோடிருந்தால் நமக்கு வாக்களிக்கப்பட்டதைப் பெற்றுக் கொள்வோம்.

விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்

# ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர் -களுக்கான வாக்குத்தத்தங்கள்



"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9).

பெந்தெகொஸ்தே நாளின்போது இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப் பட்டார்கள். பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் போலிராமல், இவர்கள் தேவ ஆவியினால் புதிய சுபாவத்திற்குள் ஜெநிப்பிக்கப்பட்டார்கள். மரணபரியந்தம் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், அதின் விளைவாக புது சிருஷ்டிகள் ஆவதற்கு ஆவிக்குரிய பிறப்பைப் பெறுவார்கள்.

பேதுரு தம்முடைய இரண்டாம் நிருபத்தில் நம்முடைய பரம அழைப்பை நமக்கு நினைப்பூட்டுகிறார். "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:3-4).

மத்தேயு 5:1-12 வசனங்களில் பதிவு செய்திருக்கிறபடி, இயேசு, அவரைப் பின் தொடர்ந்து வந்த திரளானவர்களை விட்டுவிட்டு ஒரு மலையின்மேல் ஏறி, அங்கு சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். அவரைப் பின்பற்றக்கூடியவர்களுக்கு மிகப்பெரிய வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டது. இதற்கு சாந்தம், மனத்தாழ்மை, இரக்கம், பரிவு இருதயத்தில் தூய்மை மற்றும் மனப்பூர்வமாக நீதியினிமித்தம் துன்பப்படுதல் போன்ற குணங்கள் தேவைப்படுகிறது. இந்தச் சீஷர்கள் பாக்கியவான்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஏனெனில், "சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத் தினார்களே" (மத்தேயு 5:12).

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஒரு புதிய வழியைக் கற்றுக்கொடுத்தார். ஒன்று, நீதியுள்ள பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிதல், மற்றொன்று பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளுதல். இதற்கு தேவையான மனத்தாழ்மையை, அவர்தாமே செயலாற்றினார். ஏனெனில் சகல காரியங்களிலும் பரலோக பிதாவுக்கே மகிமையைச் செலுத்தினார். நீதியின் இடுக்கமானப் பாதையில் செல்வதற்கானப் பரிசு மிகப்பெரிதாக இருந்தாலும், அந்த வழி முழுவதும் பாடுகள் நிறைந்ததாக இருக்கும் என்று இயேசு வாக்களித்தார். துவக்க நிலையில், இயேசுவின் ஊழியத்தின்போது அவர் சீஷர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள், ஆவியில் ஜெநிப்பிக்கப்படு வதற்கு முன் கொடுக்கப்பட்டதாகும். ஆயினும் உண்மையான இந்த வியக்கத்தக்க பயணத்திற்கு ஆண்டவர் அவர்களை ஆயத்தம் பண்ண துவங்கினார்.

நம்முடைய ஆண்டவரின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் தொடர்ந்து, அவர் பிதாவினிடம் ஏறிச்சென்றபின், மேல்வீட்டில் கூடியிருந்த இயேசுவின் சீஷர்களின்மேல் பரிசுத்த ஆவி ஒரு விநோதமான முறையில் பொழியப்பட்டது. இது புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் 50-ஆம் நாளான பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்றது. பெந்தெகொஸ்து, வாரங்களின் பண்டிகை அல்லது அறுவடையின் பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது. (யாத்திராகமம் 34:22; உபாகமம் 16:9-11; யாத்திராகமம் 23:16).

பரிசுத்த ஆவியைப் பெற்றபின், பேதுரு உடனடியாக வெளியே சென்று, கிறிஸ்து இயேசுவே தேவனால் அபிஷேகிக்கப்பட்ட மேசியா என்று, பெரு முயற்சியோடு பிரசங்கித்து, தேவனுடைய அற்புதமான இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றிய மிகப்பெரிய சத்தியங்களைப் பண்டிகைக்குக் கூடியிருந்தத் திரளான ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார்.

அன்றையதினம், அந்தப் பிரசங்கத்தைக் கேட்ட அனைவரும், தங்களுடைய இருதயங்களில் மனம்வருந்தி, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றார்கள். அந்நேரத்தில் கிட்டத்தட்ட 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். தேவனுடைய இரட்சிப்பின்

அறிவோடு, அவர்கள் பெற்ற வரங்களுக்கு மிகுதியான பொறுப்புகள் இனி தேவைப்படக்கூடியதாக இருந்தது. "மேன்மையும் மிக அருமையான வாக்குத்தத்தங்கள்" மிகுதியான ஆசீர்வாதங்களை வெளிப்படுத்துவது மட்டுமல்ல கிறிஸ்துவினிமித்தம் பாடுகள் அனுபவிப்பதற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. மகிமைக்குச் செல்லக்கூடிய பாதை, கடினமாகவும், இடுக்கமானதாகவும் இருந்தது.

**இடுக்கமான வழியின் பலிகள்:**

"புது சிருஷ்டிகளாக" அழைக்கப் படுகிறவர்கள், கனத்திற்கும், மகிமைக்கும், அழியாமைக்கும் அழைக்கப்படுகிறார்கள் (பிலிப்பியர் 3:14; 2 பேதுரு 1:3) என்று பல வசனங்கள் குறிப்பிடுகிறது என்று "புது சிருஷ்டி" என்ற தொகுப்பில் சகோதரர் ரசல் எழுதியிருக்கிறார். ஆனால் இந்த மகிமைக்குச் செல்லும் பாதை சோதனை, பரீட்சை, பலியினாலான இடுக்கமுள்ள பாதை என்று ஆண்டவர் எல்லா இடங்களிலும் குறிப்பிடுகிறார். ஆகவே அவருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், அந்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள் மட்டுமே முடிவில் ஜெயம் பெற முடியும். "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37). மேலும் அவர்கள் அழைக்கப்பட்ட மகிமையான காரியங்களைப் பெறமுடியும். "என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்தில் என் பலன் பூரணமாய் விளங்கும்" என்ற வாக்குத்தத்தின் வழியாக, அழைக்கப்பட்டவர்களுக்கு இந்த வழியில் செல்ல சாத்தியமாக்கிற்று" என்று சகோதரர் ரசல், "புது சிருஷ்டியின் தொகுதியில் எழுதியிருக்கிறார்."

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும் படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேதுரு 4:12).

வாக்குத்தத்தம் என்பதற்கு, "ஒருவர் ஒரு காரியத்தைச் செய்வதற்கும் அல்லது செய்யாமல் இருப்பதற்கும் கொடுக்கப்படும் உறுதி" என்று கான்சிஸ் ஆக்ஸ்போர்டு (Concise Oxford) அகராதி பொருள் கூறுகிறது. நன்மையான எதிர்பார்ப்புகளுக்கு இது அடித்தளம் போடுகிறது. "நான் வாக்குறுதி கொடுக்கின்றேன்" என்ற வார்த்தையை நாம் அடிக்கடி மிக எளிதாகப் பயன்படுத்துகின்றோம். சில சமயங்களில் நமது வாக்குறுதியினால் தூண்டப்பட்ட எதிர்பார்ப்புகள், நம் இயலாமை, மறதிபோன்ற பல்வேறு காரணங்களினால் நிறைவேறாமல் இருக்கின்றன. ஆயினும் நம்முடைய வார்த்தையை காத்துக்கொள்ளாததினிமித்தம் ஏதோ ஒருவர் ஏமாற்றம் அல்லது சோர்வடைந்திருக்கலாம்.

நம்முடைய பரலோக தந்தை அப்படியல்ல! தேவனால் செய்யப்பட்ட ஒவ்வொரு வாக்குத்தத்தமும், நிறைவேறுவதற்கு முழுமையான உத்தரவாதம் பெற்றுள்ளது. உடன்படிக்கையின் பரிசுத்த ஆவி பெற்று, அதனால் ஜெநிப்பிக்கப்பட்ட இயேசுவின் சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களை நாம் காணலாம். இயேசுவின் முதல் வருகைக்கான காலத்திற்கு முன், விசுவாசமுள்ளவர்கள் தங்களுடைய இரட்சகரிடம் வருவதற்கு ஆயத்தப்படும்படியாக, பழைய ஏற்பாட்டில் பல வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டது.

மனுஷனுடைய சிருஷ்டிப்புக்கு நாம் திரும்பி, அவர்கள் இன்னும் தோட்டத்தில் இருக்கையில், அந்த முதல் தம்பதியர் கீழ்ப்படியாமல் போனபோது, தேவன் ஒரு இரட்சகரை அனுப்புவார் என்ற ஒரு நம்பிக்கையைக் கொடுத்தார். ஏவாளிடமிருந்து ஒரு சந்ததி உருவாகி சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தேவன் ஏவாளிடம் கூறினார் (ஆதியாகமம் 3:15; ரோமர் 16:20).

இந்த நம்பிக்கையை ஆண்டவர் ஆபிரகாமிடம் மறுபடியும் உறுதிப்படுத்தும் வரையில் தேவன் ஏவாளிடம் இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுத்தப்பின் பல தலைமுறைகள் கடந்தது, பல சம்பவங்கள் நிகழ்ந்தது. "கர்த்தர் ஆபிராமை நோக்கி நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதியாகமம் 12:1-3).

பூமியிலுள்ள **முழு** குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்கு ஒரு வித்து தேவைப்பட்டது. "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில்

ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (ஆதியாகமம் 22:18).

நம்முடைய ஆண்டவரின் முதலாம் வருகையின் காலத்திற்கு நாம் கடந்துச்செல்லும்போது, கொஞ்ச காலத்திற்கு அவர்களை விட்டு அவர் செல்லுவதாகவும், ஆனால் அவர் மறுபடியும் வருவேன் என்றும் இயேசு தம் சீஷர்களிடம் கூறினார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமா யிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமா யிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒருஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:1-3).

இந்த விலையேறப்பெற்ற வாக்குத் தத்தங்கள், இயேசுவைப் பின்பற்றக்கூடிய இந்தச் சீஷர்களுக்கே கொடுக்கப்பட்டது. "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:29). இங்குச் சொல்லப்பட்ட இந்தச் சந்ததி, பூமியிலுள்ள முழு குடும்பத்தினருக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்று குறிப்பிடப்படுகிறது. "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" (கலாத்தியர் 3:16). "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்பட வில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:2).

"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவிதாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறது. நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:14-17) என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு அறிவித்தார்.

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக் குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோமர் 8:29). கிறிஸ்துவின் சீஷர்களாக அழைக்கப்பட்ட நாம், முதற் பிறந்த இயேசுவின் சகோதரர்களாக இருக்க அவரது சாயலைப் பெறுவதற்கு முன்னதாகவே உறுதிப்பெற்றிருக்கிறோம்.

"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28) என்று அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் பகுதியை நாம் கருத்தில் கொள்ளலாம். முதலில் அதன் நோக்கங்கள் நமக்குத் தெளிவாக இராதபோதிலும் சகல காரியங்களும், நம்முடைய நன்மைக்காகவும், நம்முடைய அதிகபட்சமான ஆவிக்குரிய நன்மைக்காகவும் நடைபெறுகிறது என்று தேவன் வாக்களித்திருக்கிறார். "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார், அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை" கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்" (சங்கீதம் 37:23-24). நாம் விசுவாசத்தோடு ஊழியஞ்செய்து வளர்ச்சியடைந்தால், நம்முடைய வாழ்க்கையில் நடக்கக்கூடிய சகல சம்பவங்களும் நாம் விடாமுயற்சியோடு தேடிக்கொண்டிருக்கும் பரம அழைப்பின் பந்தயப்பொருளைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று நாம் நம்பிக்கையோடு இருக்கலாம்.

**பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தம்:**

தேவ ஆவியில் அபிஷேகிக் கப்பட்டவர்களுக்கும், புதிய சுபாவத்திற்கு ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கும், வேதத்தில் அநேக அநேகமான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக் கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5:17). நாம் அவருக்குள்

நிலைத்திருந்து, அவருடைய ஆவி நமக்குள் நிலைத்திருந்தால் நாம் ஒரு புது சிருஷ்டி! விசுவாசத்தோடு இருந்தால், நம்முடைய பழைய சுபாவம் மறையும்போது நாம் பிறப்பிக்கப்படுவோம்.

சுவிசேஷ யுகத்திலிருந்து இக்காலம் வரையில், எபேசு சபையின் காலத்திலிருந்து நம்முடைய நாட்களிலிருக்கும் கிறிஸ்தவ காலம் வரையில், முழு சபைக்கும் விரிவான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டது என்ற உண்மையை மறுக்க முடியாது.

ஒவ்வொரு நிலை அல்லது சபையின் காலபகுதி, ஒரு தூதுவரோடு ஆசீர்வதிக்கப்பட்டது. குறித்த காலத்தில், ஏதோ ஒருவர் (அந்த தூதன்) தன்னையே பணையம் வைத்து, செய்தியை அறிவித்தார். அந்தக் குறிப்பிட்ட காலத்தில் விசுவாசிகளுக்கு, தனிப்பட்டவர் வழியாகக் கொடுக்கப்படும் செய்திகள் மட்டுமல்லாமல், அதற்கு இசைவான செய்திகளும் கொடுக்கப்பட்டது, "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறது என்னவெனில்" -- சபைகள் என்று பன்மையில் சொல்லப்படுகிறது. வரலாற்றில், அந்தத் தனித்துவமான காலத்தில் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் தங்களுடைய காலத்திற்கு மட்டுமே இந்தச் செய்தி கொடுக்கப்படாமல், ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றக்கூடிய அனைத்து விசுவாசிகளுக்கும் அந்நாள் முதல் இந்நாள் வரையில் இந்தச் செய்தி கொடுக்கப்பட்டது என்று இது வலியுறுத்துகிறது.

"சிறு மந்தைக்கு," கொடுக்கப்படும் பரிசு மிகச் சிறப்பாகவும், அற்புதமாகவும் ஒருவர் எளிதில் பெற்றுக்கொள்ள இயலாததாக இருக்கும். இந்த வாக்குத்தத்தங்கள் தெய்வீக சுபாவமாகிய -- அழியாமையையும்; இயேசுவோடு சிங்காசனத்தில் அமர்ந்து, ஜாதிகளை ஆட்சிசெய்து; நம்முடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டு; ஒரு புதிய நாமம் தரிக்கப்பட்டவர்களாக மறைவிலிருக்கும் மன்னாவாகிய -- பரலோக அப்பத்தைப் புசித்து இன்னும் மற்ற மகிமையான ஆசீர்வாதங்களை உள்ளடக்கியுள்ளது. ஆயினும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும், "வெற்றிப்பெற்று" "முற்றிலுமாக ஜெயம் பெற்றவர்களுக்கு" மட்டுமே இந்த வாக்குத்தத்தங்கள் உரியதாயிருக்கும்.

இறுதியாக தேவனுடைய சகல பரிசுத்தவான்களும் விருந்துண்ண பல விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களில் சிலவற்றைக் காணலாம்:-

• "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளிப்படுத்தல் 20:6).

• "யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" (வெளிப்படுத்தல் 21:2).

• "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" (வெளிப்படுத்தல் 19:7-8).

• "நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்" (1 யோவான் 2:25).

• "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1 யோவான் 3:1).

• "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப்பியர் 3:20-21).

• "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:7).

• "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபேசியர் 2:4-8).

"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபிரெயர் 12:1-2) என்று அப்போஸ்தலனாகிய பவுலோடு நாமும் மனதார சொல்லும்படிக்கு இயேசுவின் விசுவாசமுள்ள சீஷர்களுக்கு நம்முடைய பரலோக பிதாவின் வாக்குத்ததத்தங்கள் மிகப் பெரியதும் சிறப்பு வாய்ந்ததுமாக உள்ளது.

"கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும், உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும். உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்" (சங்கீதம் 25:4-5).

ஒரு விசேஷித்த அழைப்பு

# மணவாட்டி வகுப்பார்



"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவி எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரிந்தியர் 2:9, 10).

கிறிஸ்துவின் மணவாட்டியின் ஒரு பகுதியாக இருப்பதற்கான ஒரு அழைப்பைப் பெற்றிருப்பதைக் காட்டிலும், வேறு எந்தக் குறிப்பிடத்தக்க சிறப்புரிமையும் இல்லையே. பத்மு தீவில் யோவான் மிகுந்த உபத்திரவத்தில் இருக்கும்போது, இயேசு ஒரு விசேஷித்த வகையில் தனக்கு மிகவும் பிரியமாயிருந்த யோவானுக்கு இமைப்பொழுது மகிமையிலுள்ள சபையின் ஒரு காட்சியைக் காண்பித்தார். "பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான். அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது" (வெளிப்படுத்தல் 21:9-11).

வெளிப்படுத்தல் 19-ஆம் அதிகாரத்தில், மணவாட்டி வகுப்பாரை விதவிதமான அடையாளங்களைப் பயன்படுத்தி விவரிக்கப்படுகிறது. "அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார், நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன், சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" (வெளிப்படுத்தல் 19:6-8).

### அழகான மணவாட்டி:

நம்மைச் சுற்றி நாம் பார்க்கும்போது, பவுல் தன்னைச் சுற்றியுள்ள ஆவிக்குரிய சகோதரர்கள், சகோதரிகளிடம் கண்டதை நாமும் காணலாம். "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார் பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" (1 கொரிந்தியர் 1:26-27). ஆயினும் பரலோக பரிசுத்தவான்களின் கிறிஸ்தவ குணத்தையே, அழகுள்ளதாக அவர் காண்கிறார். சில நேரங்களில் இதை "உள்ளான அழகு" என்று நாம் அழைக்கிறோம். இருதயத்தில் இந்த அழகைத்தான் இயேசு கண்டு, அறிந்து நேசிக்கிறார்.

எந்தப் பரிசுத்தவானுடைய அழகான குணத்தையும் நாம் காணும்போதும் இயேசு காணக்கூடிய அவ்விதமான அழகை நாம் காணலாம். "போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப் படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்" (1 பேதுரு 3:2-4). இப்படிப்பட்ட குணங்களோடு சகோதரர்களை அவர் கவனிக்கிறபடியே நாமும் கவனிக்கிறோமா? இது ஆம் என்றால், நாம் இத்தகையான மனநிலையில் மேம்பட வேண்டும்.

### ரெபெக்காள்:

மணவாட்டி வகுப்பாரைப் பற்றிக் குறிப்பிடும் இந்தக் குணங்களின் அழகு பலமுறைகள் பழைய ஏற்பாட்டில் சித்தரிக்கப்பட்டுள்ளது. எலியேசரின்

(பரிசுத்த ஆவி) தலையீட்டின் வழியாக ஈசாக்கின் (இயேசு) மணவாட்டியாக அழைக்கப்பட்ட ரெபேக்காளை கருத்தில்கொள்ள துவங்கலாம். (ஆதியாகமம் 24-ஆம் அதிகாரத்தில், அந்த ஊழியக்காரரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஆதியாகமம் 15:2-ஆம் வசனத்தில் பிரதான ஊழியக்காரனாகக் குறிப்பிடப்படுவதினால், பொதுவாக அந்த ஊழியக்காரர் எலியேசர் என்று கருதப்படுகிறது. ) இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு நபர் உண்டு. இவர் ரெபெக்காளின் தாதி என்று அதற்குப் பின் வாசிக்கிறோம் (ஆதியாகமம் 24:59). அதற்குப் பின் அவளுடைய பெயர் தெபோராள் (ஆதியாகமம் 35:8) என்று அறிந்துகொள்கிறோம். ஒருவேளை ரெபேக்காளை போஷிக்கக்கூடிய இந்த வயது முதிர்ந்த தாதி, இயேசுவின் சீஷர்களின் "மேகம் போன்ற திரளான சாட்சிகளாகிய" முற்பிதாக்களின் தாக்கங்களை அடையாளப்படுத்தலாம் (எபிரெயர் 12:1).

ஈசாக்குக்காக ஒரு நல்ல மணவாட்டியைத் தேர்வு செய்வதற்காக எலியேசர் தேவனிடம் ஜெபித்தார். தெய்வீக நோக்கங்களின்றி, சரியான நபரிடம் எவ்வாறாகக் கேள்வி கேட்க முடியும்? ஆகவே எலியேசர், "நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும்போது: குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும்" (ஆதியாகமம் 24:14) என்று ஜெபித்தார். அப்படிப்பட்ட ஒரு நபரைத்தான் பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவுக்கு தேடுகிறார். இவர்கள் இரக்கமுள்ளவர்களும், ஆதரவு கொடுக்கக் கூடியவர்களும், பணி செய்யக்கூடியர்களும், வைராக்கியமுள்ளவர்களும், அவர்களிடம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமாகச் செய்யக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

எலியேசரின் விண்ணப்பம் அவருக்கும் அளிக்கப்பட்டது. "அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்தவேலுக்குப் பிறந்த ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்தாள். அந்தப் பெண் **மகா ரூபவதியும்**, புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள் அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள்" (ஆதியாகமம் 24:15, 16). அந்த அந்நியரிடம் அவள் மிகுந்த அன்புடையவளாக, உதவிகள் செய்வதில் மிகவும் ஆவலுடையவளாக இருந்தாள். அவள் எலியேசரின் தாகத்தைத் தீர்த்தப்பின், "உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி; சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்ப்பேன்" (ஆதியாகமம் 24:19, 20) என்றாள்.

இப்படிப்பட்ட ஆவியை நாம் பெற்றுள்ளோமா? "தங்களின் முயற்சிகளை நிறுத்த விரும்பாதளவுக்கு, சிறுமந்தையானவர்கள் ஆண்டவரின் ஊழியத்தில் மகிழ்ந்திருப்பார்கள்" (R5413).

எலியேசர், ரெபெக்காளுக்கு 1/2 சேக்கல் காதணிகளைக் கொடுத்தார். அதற்குப் பின் அதே அளவிலான பொன் - இது இரட்சிப்பின் அடையாளமாக பயன்படுத்தப்பட்டது (யாத்திராகமம் 30:12, 13). மற்றும் 10 சேக்கலான இரண்டு பொன் கடகங்களையும் கொடுத்தார். இது சபை அங்கத்தினர் தேவனால் அழைப்பு பெறும்போது இவர்கள் தெய்வீக வேலைகளுக்கு நியமிக்கப்படுவதை அடையாளப்படுத்தும்.

ரெபெக்காள் ஆபிரகாமின் ஊழியக்காரரைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தாள். அவளுடைய குடும்பத்தில் அவருக்கும், அவருடைய மிருக ஜீவன்களுக்கும் தங்கும் இடங்களையும், உணவும் அளித்தார்கள். அதற்குப்பின் சம்பாஷணைகள் தொடர்ந்தது, அநேக வெகுமதிகள் அந்தக் குடும்பத்தாருக்குக் கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 24:53). மறுநாள் காலையில், ரெபெக்காளின் குடும்பத்தினர் அவளுடைய பிரயாணத்தை தாமதிக்க விரும்பினார்கள். ஆனால் அவள் உடனே புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தாள். "நான் போகிறேன்" (ஆதியாகமம் 24:58) என்று அவள் பதில் அளித்தாள். அவளும் அவளுடைய பரிவாரங்களும் புறப்பட்டார்கள். சுவிசேஷ யுகத்தின் சாயங்கால வேளையில், அறுவடை நேரத்தில் சபை நம்முடைய ஆண்டவரைப் பார்ப்பதுபோல அந்தப் பயணத்தின் முடிவில் "சாயங்கால நேரத்தில்" அவள் ஈசாக்கை சந்தித்தாள். நமக்கும் இயேசுவுக்கும் இடையில் மாம்சமான திரை நம்மைப் பிரிப்பதுபோல ரெபெக்காள் ஈசாக்கை சந்திக்கும்போது அவள் முக்காடிட்டுபோய்க் கொண்டிருந்தாள். நாம் அவரை முகமுகமாக தரிசிப்பதுபோல. அதற்குப் பின் அவர்கள்

ஒன்று சேர்ந்தார்கள். அதற்குப் பின் ஈசாக்கு தன் தாயாகிய சாராளின் மரணத்தின் துக்கத்திலிருந்து ஆறுதல் அடைந்தார். இது கிறிஸ்துவின் திருமணத்தையும் அதைத் தொடர்ந்து அவருடைய மணவாட்டி முழுமையாகக் கடந்துச் செல்வதையும், அல்லது ஆபிரகாமின் உடன்படிக்கையின் பரலோக அழைப்பின் முடிவையும் அடையாளப்படுத்துகிறது (ஆதியாகமம் 24:63-67).

பூமியின்மேல் அவருடைய இராஜ்யத்தின் ஸ்தாபனமே தேவ திட்டத்தின் அடுத்த பகுதியாக இருக்கும். வட திசைக்கு (பரலோக இராஜ்யம் -- சகரியா 14:4; எசேக்கியேல் 47:1 காண்க). நேர் எதிரான தென் திசையை இது அடையாளப்படுத்தும். இதினிமித்தமாகவே, ஈசாக்கு ரெபெக்காளை சந்திக்கும் நேரத்தில், "தேசத்தின் தென் திசையில்" என்று வாசிக்கிறோம். மற்றும் ஒருவேளை இதற்காகத்தான் அவர்களின் சந்திப்பின்போது ஈசாக்கு, "தென் தேசத்தில் குடியிருந்திருக்க வேண்டும்." மேலும் மாம்சீக இஸ்ரயேலரை அடையாளப்படுத்தும் இஸ்மாயேலுக்கு தேவனிடம் கிருபை உண்டென்று தேவன் அவனுக்கு வாக்களித்தபோது குறிப்பிட்ட அதே, "லகாய் ரோயீ என்ற துரவு" இங்கும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதியாகமம் 24:62, 16:14).

### சாராள், ரெபெக்காள் மற்றும் ராகேல்:

ரெபெக்காளைக் குறித்துப்பார்க்கும்போது, "பார்வைக்கு அழகுள்ளவள்" என்று வாசித்தோம் (ஆதியாகமம் 24:16). இதுபோல சாராளும் அழகுள்ளவளாக இருந்தாள். ஆபிரகாம் சாராளோடு எகிப்துக்குச் சென்றபோது, சாராள் மிகவும் சௌந்தரியமுள்ளவளாக இருந்ததினிமித்தம் அவர் பயந்தார் என்று வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 12:13, 14).

ராகேல் அழகுள்ளவளும் யாக்கோபினால் நேசிக்கப்பட்ட மனைவியாக இருந்தாள். "ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள்" (ஆதியாகமம் 29:17).

இந்த மூன்று ஸ்திரீகளும் பரலோக அழைப்புக்குத் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவையும் சபையையும் அடையாளப்படுத்தும் ஈசாக்கைச் சுமந்த சாராள் ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆவிக்குரிய பகுதியை அடையாளப்படுத்துகிறாள். ராகேலும் இதையே அடையாளப்படுத்துகிறாள். அவளுடைய குமாரனாகிய யோசேப்பு கிறிஸ்துவையும், சபையையும், அவள் மரிக்குமுன் பிறந்த பென்யமீன், திரள்கூட்டத்தாரையும் அடையாளப்படுத்துகிறார்கள். இப்படியாக ஆவிக்குரிய சாராள் மற்றும் ரெபெக்காள் அடையாளப்படுத்தும் ஆவிக்குரிய வகுப்பாரைப்பற்றிக் குறிப்பிடாத, கூடுதலான விவரங்களை ராகேலைப்பற்றிய அடையாளங்கள் கூடுதலாக விவரிக்கிறது.

லேயாள் அதிகமாக நேசிக்கப்படவில்லை. அவள் தனது இளைய சகோதரியைக் காட்டிலும் லேயாளிடம் அழகு குறைவாக இருந்தாலும் அவளது கூச்சப்பார்வை பாராட்டுவதற்குரியது.மேலும் அவளும் தன்னை உகந்த முறையில் வழங்கினாள். ஆறு குமாரர்களைப் பெற்றாள். இது கேத்தூராள் பெற்ற ஆறு குமாரர்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. ஆபிரகாமின் உடன்படிக்கையில் சாராள் பரலோக பகுதியை அடையாளப்படுத்துவதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, கேத்தூராள் பூமிக்குரிய பகுதியை அடையாளப்படுத்துவது போல, லேயாளும் வாக்குத்தத்தின் பூமிக்குரிய பகுதியை அடையாளப்படுத்த வேண்டும். (கேத்தூராளின் ஆறு குமாரர்கள் போல, தாதியின் (handmaid) குமாரர்களும் யாரை அடையாளப்படுத்துவார்கள் என்ற கேள்வி எழும்புகிறது. இருவருக்கும் இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். சில்பாளின் குமாரர்கள் காத் மற்றும் ஆசேரும், திரும்பச் சீர்பொருந்தின திரளான மனுக்குலமும், திரும்பக் கொடுக்கப்படும் மகிழ்ச்சியையும் அடையாளப்படுத்தப்படும். ஏனெனில், "திரளான" மற்றும் மகிழ்ச்சி என்று அவர்களின் நாமங்களுக்குப் பொருள் என்று காண்கிறோம் (ஆதியாகமம் 30:11, 13). ராகேலின் தாதியான பில்காள் ஒருவழியாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்குச் சம்பந்தப்பட்டிருந்தாலும், அவைகளைப் பெற்றுக்கொள்ள தவறினவர்களை அடையாள் படுத்துகிறார்கள். தாண் மற்றும் நப்தலி இவளின் பிள்ளைகள். வெளிப்படுத்தல் ஏழாம் அதிகாரத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலின் கோத்திரங்களின் மத்தியில் தாண் காண படுவதில்லை. வாய்ப்புக்கொடுக்கப்பட்டிருந்தாலும், ஜெயங்கொள்ள தவறினவர்களை இவள் அடையாளப் படுத்துகிறாள். நப்தலி என்பதற்குப் போராட்டம் என்று பொருள் (ஆதியாகமம் 30:8). பரலோக அழைப்பைப் பெற்றிருந்தும், அந்த வாய்ப்பை இழந்துபோன மாம்ச இஸ்ரயேலை அடையாளப் படுத்துகிறான். யாக்கோபைப்போல ஆற்றண்டையில், தூதனோடுப் போராடியதுபோல, இஸ்ரயேல் சமாதானத்திற்காகப் போராடியதால், விடியற்காலத்தில் அதைப் பெறுவார்கள்) (ஆதியாகமம் 32:24-26). இவைகள் அற்புதமான வாக்குத்தத்தங்கள். ஆயிரவருட ஆட்சியின் வேலைகள் முடிவடையும்போது, மனுக்குலத்திற்கு ஒரு அருமையான எதிர்காலம்

காணப்படும். ஆனால் அந்த ஒப்புமைகளை நாம் காணும்போது - அழகானவர்கள் பரலோகத்திற்குரியவர்கள். நம்முடைய ஆண்டவர் நமக்குள் தேடுகிற குணங்களின் அழகைப் பிரதிபலிக்க வேண்டும். அவர் நம்மைக் கவனிக்கிறார், அவர் நம்மிடம் ஈர்க்கப்படுகிறாரா?

**எஸ்தர்:**

இராஜாத்தியாகிய எஸ்தரைக் காட்டிலும் பரிசுத்தவான்களின் அழகு வேறு எந்த நிழலிலும் காணப்படுவதில்லை. வஸ்தி (மாம்ச இஸ்ரயேல்) தன்னுடைய அழகை வெளிப்படுத்த விரும்பாததினால் ஒதுக்கி வைக்கப்பட்ட பின், இயேசுவின் முதல் வருகையில் மாம்ச இஸ்ரயேலர் தங்களுடைய குணங்களின் அழகை வெளிப்படுத்த மறுத்த போது, தேசம் முழுவதும் அழகுள்ள கன்னிகைகளின் தேடல் துவங்கியது. எஸ்தர் மொர்தெகாயினால் (பரிசுத்த ஆவி) போஷிக்கப்பட்டாள். "அந்தப் பெண் அவன் பார்வைக்கு நன்றாயிருந்ததினால், அவளுக்கு அவன் கண்களிலே தயைகிடைத்தது; ஆகையால் அவளுடைய சுத்திகரிப்புக்கு வேண்டிய வைகளையும், அவளுக்குத் தேவையான மற்றவைகளையும் அவளுக்குக் கொடுக்கவும், ராஜ அரண்மனையிலிருக்கிற ஏழு தாதிமார்களை அவளுக்கு நியமிக்கவும் ஜாக்கிரதைப்பட்டு கன்னிமாடத்தில் சிறந்த ஒரு இடத்திலே அவளையும் அவள் தாதிமார்களையும் வைத்தான்" (எஸ்தர் 2:9).

"ஆறு மாதம் வெள்ளைப்போளத்தினாலும்," "ஆறு மாதம் சுகந்த வர்க்கங்களினாலும்" எஸ்தர் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டு ஆயத்தமானாள் (எஸ்தர் 2:12). பரலோக அழைப்பைப் பெற்ற நாமும் இவ்வாறாகவே ஆயத்தப்பட வேண்டும். நம்முடைய இராஜாவும், மணாளனுடைய பிரசன்னத்தில் நிற்பதற்காக நாம் ஆயத்தப்பட வேண்டும். பாவத்தின் இரவு நேரத்தின்போது (ஆறு மாதம்) நமக்கு வெள்ளைப்போளம் (கசப்பான அனுபவங்கள்) மற்றும் (சுகந்த வர்க்கங்களும் மற்றவர்களுக்குச் சுகந்த வாசனை வீசக்கூடிய ஆவிக்குரிய கனிகள்) தேவை.

இந்தத் திட்டமிட்ட ஒழுங்கு, நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட காலம் முழுவதிலும் பொருந்தக்கூடியதாக உள்ளது. இது ஒரு நீண்ட காலமாக தோன்றுகிறது. ஆயினும் நித்தியமான யுகங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கையில், கடக்கக்கூடிய காலம் ஒரு நொடிபொழுதாக தோன்றும்.

இராஜாவுக்கு முன் நிற்பதற்கான எஸ்தரின் முறைவந்தபோது, அவர் ஸ்தம்பித்துப் போனார். "மொர்தெகாய் தனக்குக் குமாரத்தியாய் ஏற்றுக்கொண்டவளும், அவன் சிறியதகப்பனாகிய அபியாயேலின் குமாரத்தியுமான எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கிறதற்கு முறைவந்தபோது, அவள் ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாய் நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் கேட்கவில்லை; எஸ்தருக்குத் தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது. ராஜா சகல ஸ்திரீகளைப்பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்புவைத்தான் சகல கன்னிகைகளைப்பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது; ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான்" (எஸ்தர் 2:15, 17). எவ்வளவு நேர்த்தியான சித்திரம். மற்றவர்களுக்கு முன் நாம் எவ்வளவு எளியவர்களாகத் தோன்றினாலும், நம்முடைய இராஜா நம்முடைய அழகுள்ள குணங்களை எதிர்பார்க்கிறார். நாம் விரும்பினால் நாம் அழகுள்ளவர்களாகலாம். நாம் அழகுள்ளவர்களா? அவர் கவரப்பட்டாரா?

**சாலொமோனுக்காக ஒரு மணவாட்டி:**

வேதாகமத்தில் மணவாட்டியைப்பற்றிய மிக அழகான நிழல்களில் ஒன்று 45-ஆம் சங்கீதம் கொண்டுள்ளது. இது ஒரு இராஜாவின் திருமணத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறது. இது இராஜாவாகிய சாலொமோனையும் அவருடைய மணவாட்டி, எகிப்து தேசத்து பார்வோனின் குமாரத்தியாக இருக்க வேண்டும். உயர்ந்த நவநாகரீக முறையில், நடந்த அந்தக் கலியாணத்தின் வர்ணனையை நாம் காணலாம். இங்குச் சாலொமோன் இயேசு இராஜாவையும், மணவாட்டி சபை வகுப்பாரையும் அடையாளப்படுத்துகிறார்கள் (சங்கீதம் 45:6; எபிரெயர் 1:8). ஏனெனில் அந்த மணவாட்டியும் ஒரு இராஜாவின் (பார்வோன்) குமாரத்தியாக இருந்ததினால் இவ்வாறாக அழைக்கப்படுகிறாள்.

"ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது" (வசனம் 13). உள்ளான மகிமையுள்ள, இவ்விதமான அழகைப்பற்றியே நாம் கவனம் உள்ளவர்களாக இருக்கிறோம். பொற்சரிகையினால் நெய்யப்பட்ட அந்த வஸ்திரம், நம்மை இராஜாவினிடத்தில் பிரவேசிக்கச் செய்வதற்கு தெய்வீக கனிகளினால் அலங்கரிக்கப்பட்டதின் மதிப்பைக் குறிப்பிடுகிறது. இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு நாம்,

"குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார் அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்" (வசனம் 10, 11).

இந்த விஷயத்தில், இயேசு வாசனைவீசும் நறுமணமாக அடையாளப்படுத்தப்படுகிறார். "நீர் மகிழும்படி உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம், சந்தனம், இலவங்கம் இவைகளின் வாசனை பொருந்தியதாயிருக்கிறது" (வசனம் 8). வெள்ளைப்போளமும், சுகந்த வர்க்கங்களும், இயேசுவை அடக்கம் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது (யோவான் 19:39). இவைகள் இயேசுவின் குறிப்பிடத்தக்க கசப்பான அனுபவங்களையும், அதிலிருந்து நாம் பெறும் சுகத்தையும் அடையாளப்படுத்தப்படுகிறது. கருவாப்பட்டை வல்லமைக்கு அடையாளம். இப்போது இயேசு மகிமையில் பெற்றிருக்கும் வல்லமையே. வெண்மையான வெண்வஸ்திரம், திரையைக் கடந்துச் சென்ற பரிசுத்தவான்களின் நீதியை சித்தரிக்கிறது (வெளிப்படுத்தல்19:8). இங்கு வெண்மையான தந்தம், இயேசு உயர்வான பரலோக நிலைக்கு உயர்த்தப்பட்டதற்குப் பொருத்தப்படுகிறது.

ஒரு மணவாளன் தன்னுடைய கலியாண விழாவில், அவருடைய அழகான மணவாட்டிக்காகக் காத்திருப்பதின் காட்சி கவனிக்கத்தக்கது. நம்முடைய மணவாளன் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். நாம் அவரை நோக்கிச் செல்கையில் நாம் நம்முடைய ஆவிக்குரிய அழகால் ஈர்க்கிறவர்களாக மாற வேண்டும். இயேசு நம்முடைய அழகை எதிர்பார்த்திருக்கிறார். நம்முடைய முயற்சிகள் அவருடைய முகத்தில் புன்சிரிப்பையும் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொண்டுவரட்டும்.

**சூனேமியாள்:**

கிறிஸ்து தன்னுடைய மணவாட்டிக்காக கொண்டிருக்கும் அன்பை உன்னதப்பாட்டு விவரிக்கிறது. ஆனால் இங்குச் சபை ஒரு இளவயது பண்புடைய, தன்னடக்கமான பெண்ணாக உருவம் காட்டப்படுகிறது. எவ்வளவு தாழ்மையுள்ளவளாக இருந்தாலும், தன் மணவாளனின் அரும் பொருளாகக் கருதப்படுகிறாள். உன்னதப்பாட்டு 6:13-ஆம் வசனம் அவளை "சூனேமியாள்" என்று குறிப்பிடுகிறது. சாலொமோன் என்பதற்குச் "சமாதானம்" என்று சொல்லப்படுவது போல, பெண்பாலில் சூனேமியாள் என்பதற்கும் "சமாதானம்" என்று பொருளாகும்.

இந்த அழகானப் பெண் தன்னை, "கேதாரின் கூடாரங்களைப்போலவும், . . . நான் கறுப்பாயிருந்தாலும், அழகாயிருக்கிறேன்" (உன்னதப்பாட்டு 1:5) என்று விவரிக்கிறாள். கறுப்பு துக்கத்தின் அடையாளமாக இருக்கிறது. அது பஞ்சமாக (புலம்பல் 5:10) இருக்கலாம் அல்லது இங்கு நம்முடைய குணங்களை வளர்ச்சியடையச் செய்வதற்கு தேவையான பாடுகளை இது அடையாளப்படுத்தலாம்.

நம்முடைய பரலோக நேசரை தேட வேண்டுமானால், உன்னதப்பாட்டு 1:8-ஆம் வசனம் நமக்கு ஆலோசனைக் கூறுகிறது. "ஸ்திரீகளில் ரூபவதியே! அதை நீ அறியாயாகில், மந்தையின் காலடிகளைத் தொடர்ந்துபோய், மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டையில் உன் ஆட்டுக்குட்டிகளை மேயவிடு." மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் இயேசுவின் மந்தைகளைப் பின்பற்றினால், நாம் அவரைக் கண்டடையலாம்.

இரண்டாம் அதிகாரம், 8-ஆம் வசனத்திலிருந்து தொடர்ந்து பார்த்தால், சுவிசேஷ யுகத்தின் கடும் வேதனையின் குளிர்காலத்திற்குப் பின் தன்னுடைய மணவாட்டியை அழைத்துச் செல்வதற்கு வரும் மணாளனைப்போல இயேசு இங்கு நிழலாகக் காணப்படுகிறார். அறுவடையின், வசந்த காலத்துப் புதிய ஜீவனில், "என் நேசர் என்னோடே பேசி: என் பிரியமே! என் ரூபவதியே! எழுந்துவா" (உன்னதப்பாட்டு 2:10) என்கிறார்.

திரும்பவரும் தன்னுடைய கணவனைத் தேடும்பொழுது விடிவதற்கு முன் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் சூனேமியாளின் ஆவியைப்பற்றி மூன்றாம் அதிகாரம் கூறுகிறது. சுவிசேஷ யுகத்தில் மணவாட்டி இங்கு இருப்பதுபோல நான்காவது அதிகாரம் விவரிக்கிறது - இதற்கு எதிரிடையாக, ஏழாம் அதிகாரத்தில், மணவாட்டி தலை முதல் பாதங்கள்வரை முழுமையாக மகிமையுள்ளவளாக விவரிக்கப்படுகிறாள். இந்தப் பிரதியின் மறுபக்கத்தைக்குறித்து ஐந்தாம் அதிகாரம் கூறுகிறது. இதில் மணவாட்டியாக அழைக்கப பட்டவர்கள் சரியாக ஊக்குவிக்கப்படாததினால் எவ்வாறாக திரள்கூட்டத்தாராக மாறுகிறார்கள் என்று விவரிக்கப்படுகிறது. தொடர்ந்துவரும் ஆறாம் அதிகாரத்தில், அவள் ஏதோ அற்புதமானதை இழந்ததாக அறிந்துகொள்கிறாள். எட்டாம் அதிகாரம், சபையின் நம்பிக்கைகளைத் தொகுத்துக் கூறுகிறது. மற்றும் மணவாட்டியின் வளர்ச்சியடைந்த நிலையையும் காட்டுகிறது (அவளுடைய சிறிய சகோதரியாகிய

திரள்கூட்டத்தாரை ஒப்பிட்டுப்பார்க்கும்போது) மேலும் விசுவாசம் குறைவுள்ளவர்களுக்கான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. பரிசுத்தவான்களுடைய நம்பிக்கையோடு நிறைவடைகிறது. "என் நேசரே! தீவிரியும், கந்தவர்க்கங்களின் மலைகள்மேலுள்ள வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்" (உன்னதப்பாட்டு 8:14).

அவர் மணவாட்டியை அழைத்துச் செல்வதற்காக கிறிஸ்துவின் திரும்புதல் இக்காலத்தில் இயேசு நமக்குள் எதைக் காணவிரும்புகிறார் என்பதை புரிந்துகொள்வதற்கு நான்காம் அதிகாரத்தைக் காணலாம். "நீ ரூபவதி, என் பிரியமே! நீ ரூபவதி; உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக்கண்களாயிருக்கிறது; உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப்போலிருக்கிறது" (வசனம் 1). இங்கு முதலில் குறிப்பிடப்படுவது சமாதானம், "புறா கண்கள்" ஒருவர் மற்றொருவரை சந்திக்கும்போது, இயல்பாக நாம் அந்நபரின் கண்களைப்பார்ப்போம். சமாதானத்தைக் காண்கிறோமா? அதைத்தான் இயேசு காணவிரும்புகிறார். அதற்குப் பதிலாக அமைதியின்மை, கோபம் இருந்தால், நாம் அழகுள்ளவர்களாக இருப்பதில்லை. தலை மயிர் பக்திக்கு அடையாளம். சிம்சோனின் கத்தரிக்கப்படாத மயிர் அவருடைய நசரேய விரதத்தின் விசுவாசத்தை அடையாளப் படுத்துகிறது. இங்கு இந்த மணவாட்டி அதிகமான மயிரை உடையவளாக இருக்கிறாள். நாம் பத்தியுள்ளவர்களாக இருந்தால், இயேசு நம்மை இவ்வழியில் காண்பார்.

அவளுடைய பற்கள், முழுமையானதும், வெண்மையானதும் சுத்தமானதும், ஆரோக்கியமான ஆவிக்குரிய உணவைப் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளதாகவும் உள்ளது. நாம் இவ்வாறு பழக்கப்பட்டிருக்கிறோமா? "பயன்படுவதற்கான காரணத்தையும்" (எபிரெயர் 5:14). நம்முடைய விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் ஆதரவு என்ன என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? அல்லது நாம் சேமித்து வைத்திருக்கும் வரிசையான பதவிகளை இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறோமா? அவளுடைய உதடுகள் சிவப்பு நிறமான நூலைப்போல, தன்னுடைய இரட்சிப்பைப்பற்றி பிரஸ்தாபப்படும் பேச்சுகள் காணப்படுகிறது. அவள் கிறிஸ்துவினால் அழைத்துவரப்பட்ட நிலையை தியானிக்கையில், அவளுடைய கன்னங்கள் மாதுளையை போல இளஞ்சிவப்பாயிருக்கிறது. (வசனம் 2, 3; யாத் 28:33, 34).

உயரமாகவும் ஆடம்பரமாகவும் இருக்கும் அவள் கழுத்து விசுவாசத்தின் ஆதரவையும் கவசத்தையும் குறிக்கும் (வசனம் 4). மேலும் கிறிஸ்தவ வளர்ச்சிக்கான அற்புதமான அம்சங்களில் அவள் வளர்ச்சியடைந்திருக்கிறாள் (வசனம் 5) என்று இயேசு நம்மிடம் அடையாளங்களின் வழியாகப் பேசுவார். "என் இருதயத்தைக் கவர்ந்து கொண்டாய்; என் சகோதரியே! என் மணவாளியே! ,,, உன் நேசம் எவ்வளவு இன்பமாயிருக்கிறது" (உன்னதப்பாட்டு 4:9, 10). நம்முடைய நேசிக்கப்பட்டவரின் முன் நாமும் இவ்வாறாகவே நம்மை வழங்க வேண்டும்.

"என் நேசர் ... மதிலுக்குப்புறம்பே நின்று, பலகணி வழியாய்ப்பார்த்து, கிராதியின் வழியாய்த் தமது மலர்ந்த முகத்தைக் காண்பிக்கிறார்"

(உன்னதப்பாட்டு 2:9)

நீதியுள்ள வாழ்க்கை எப்போதும் பரிந்துரைக்கப்படுகிறது

# விசுவாச வீட்டார்



Rabert Brand

""ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10).

அர்ப்பணிக்கப்படுதலுக்குக் கூடுதலாக நம்முடைய ஐக்கியத்தில் பல தனி நபர்கள் தேவனையும் அவருடைய சத்தியத்தையும் அதிகமாக நேசித்தாலும், உடன்படிக்கையை என்றுமே உரிமைப்பாராட்டுவதில்லை. இவர்கள் தேவனை நேசிப்பார்கள், இவர்கள் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை எதிர் நோக்குவார்கள், சகோதரர்களோடு இருப்பதற்கு விரும்புவார்கள், உண்மையில் மாநாட்டு ஏற்பாடுகள் போன்ற பல்வேறு வேலைகளில் அடிக்கடி உதவி செய்வார்கள். பவுலின் விவரங்களை குறித்து பாஸ்டர் ரசலின் விளக்கங்கள் இவ்வாறாக உள்ளது:

"விசுவாச வீட்டார் - என்ற வார்த்தைகள் மிகவும் விரிவானது. இவர்கள் உடன்படிக்கை செய்தவர்களை மட்டுமல்ல, ஆண்டவரையும், சத்தியத்தையும் நோக்கி வரக்கூடியவர்களையும் இது உள்ளடக்கும். உண்மையில் யார் ஒருவர் நிழலான ஆசரிப்புக்கூடாரத்தை நோக்கி வருகிறார்களோ, அவர்கள் நெருங்கி வருவதற்கு நாம் ஊக்கம் அளிப்பதற்கான காரணம் இதுவே. அவர் தன்னை அர்ப்பணிக்காவிட்டாலும் அந்த வழியில் ஒரு பகுதியை அவர் கடந்திருக்கிறார். கண்டிப்பான ஒரு உணர்வில் நாம் பார்க்கும் போது, விசுவாச வீட்டார் உடன்படிக்கைச் செய்தவர்களை மட்டுமே உள்ளடக்குகிறது. ஆனால் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு செலவிடும் செலவை கணக்குப் பார்ப்பவர்களை விசுவாச வீட்டார் என்று எண்ணப்படுகிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகள் நியாயப்படுத்துகிறது. மேலும் உடன்படிக்கையை எதிர்நோக்கும் யாரானாலும் சரி, அவர்களுக்கு நாம் விசேஷித்த உதவிகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். மனுஷரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆண்டவரிடத்தில் நடத்துதே நம்முடைய தொடர்ச்சியான மற்றும் விருப்பமும், முயற்சியாகவும் இருக்கவேண்டும். இப்படியாக நாம் இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வழி நடத்தினவருடைய புண்ணியங்களையும், புகழையும் அறிவித்து கொண்டிருப்போம்" (R5358).

இயேசுவின் ஊழியத்தின்போது சீஷர்கள் அல்லாத சில நண்பர்கள் இருந்திருக்கக்கூடும். "அதற்கு அவர்: நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும்போது, தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான் நீங்கள் அவனுக்குப் பின்சென்று, அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும்போய், அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள், அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே ஆயத்தம் பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்" (லூக்கா 22:10-12). "வீட்டிலுள்ள அந்த நல்ல மனுஷன்" ஒரு சீஷனாக இராமல் விசுவாசமுள்ள ஒரு யூதனாக இருந்திருக்க வேண்டுமென்று நாம் நியாயமாக யூகிக்கிறோம். அவர் சீஷராக இராதபோதிலும், அவர்களுடைய கூடுகைக்கு அந்த இடத்தை தேவையானப் பொருட்களினால் ஒழுங்கு செய்து, அவர் ஆண்டவருக்கும் அப்போஸ்தலர்களுக்கும் அதிகமான உதவிகளைச் செய்தார். ஒருவேளை உணவு ஆயத்தம் செய்வதிலும் மற்ற வேலைகளையும் அவருடைய குடும்பத்தில் செய்திருக்க வேண்டுமென தோன்றுகிறது.

சபையின் ஒழுங்குகளில் புது சிருஷ்டிக்கு, "ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பவரை" உடன் சகோதரர்களாக நாம் கண்ணோக்குகிறோம். "உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான், சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 10:40-42). இந்த யுகத்தில் தேவனுடைய ஜனங்களுக்கு உதவிச் செய்யக்கூடியவர்களுக்கு இராஜ்யத்தில் பரிசளிக்கப்படும் என்று இயேசு கூறுகிறார். தேவனையும், அனைவருக்கான அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை நேசிப்பவர்களையும், அவருடைய சத்தியத்தை கட்டித்தழுவக் கூடியவர்களை ஒதுக்கிவிடாமல் சபை அவர்களை வரவேற்க வேண்டும்.

# ஐந்து வருடங்களுக்குப் பிறகு

துருக்கியில் ஒரு தெரு வியாபாரி 2010-இன் பிற்பகுதியில் தற்கொலை செய்துகொண்ட பொழுது, Sidi Bouzid என்ற ஒரு பட்டணத்தில் அரசிற்கு எதிரான ஒரு எதிர்ப்பு துவங்கியது. அப்பொழுதுதான் அரேபிய எழுச்சி துவங்கியது. 2011-ஆம் ஆண்டு துவக்கத்தில் கூட்டத்தைச் சமாளிக்க முடியாதக் காரணத்தினால் அந்நாட்டின் ஜனாதிபதியான Zine El Abidine Ben Ali 23 ஆண்டுகள் ஆட்சிக்குப் பின் அந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். இவரது வீழ்ச்சியின் காரணமாக, மத்திய கிழக்கு நாடுகளில் இன்னும் இதேபோன்ற எழுச்சிகள் ஆரம்பமானது.

மக்களின் புரட்சியால் எகிப்திய ஜனாதிபதி Hosni Muburak அகற்றப்பட்டார். இதேபோன்ற பல எழுச்சிகள் Yemen. Libya மற்றும் Bahrain போன்ற நாடுகளிலும் நடைபெற்றது. இதுபோன்ற கிளர்ச்சிகளின் விளைவால் ஊழல் நிறைந்த சர்வாதிகாரத்திலிருந்து, மக்களாட்சி மற்றும் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படும் என்று அனைவரும் நம்பிக்கையோடு இருந்தனர். அல்-குவைதா போன்ற தீவிரவாத இயக்கங்களின் தலையீடு இல்லாதிருந்ததால், மெய்யாகவே மக்களாட்சி வெற்றி பெற்ற தோற்றத்தை அளித்தது. ஆனால் இந்த நம்பிக்கை சிறிது காலமே நீடித்தது. மேலும் பல மாநிலங்களில் குழப்பத்தில் அமிழ்ந்தே இருந்தது.

லிபியாவில் எட்டுமாத காலம் நடந்த உள்நாட்டு போரால் Muammar Gaddafi கொலை செய்யப்பட்டார். அதன் பிறகு அங்கு குழப்பமே ஆட்சி செய்தது. ஏமனில் அலி அப்துல்லா சேலாயின் 22 ஆண்டுகள் ஆட்சியின் முடிவு மனித நேயத்திற்கு ஒரு பேரிடராய் இருந்தது. ஹவுதி வன்முறையாளர்களை நீக்கும் நோக்குடன், சௌதியில் ஏற்பட்ட குண்டு தாக்குதலால் பலர் உயிரிழக்க நேர்ந்தது. அமெரிக்க கடற்படையின் ஐந்தாவது கடற்படை முகப்பு மற்றும் பெஹ்ரெனில் நடந்த எதிர்ப்புகளே அரேபிய எழுச்சிகளில் நடந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டமாகும். பெரும்பான்மையினராய் இருந்த ஷியா முஸ்லீம்களால் இயக்கப்பட்ட புரட்சியாளர்கள், தங்களுக்கென்ற அரசியல் உரிமைகள் வேண்டுமென்று சன்னி தலைமையிலான முடியாட்சியிடம் கோரிக்கை வைத்தனர். நட்பு நாடுகளான சௌதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளின் ஊடுருவலைக்கொண்டு அந்த முடியாட்சி புரட்சியாளர்களைத் தாக்கியது. அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் மற்றும் உரிமைக்காகப் போராடுபவர்களை இன்றும் கைது செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். புரட்சிகள் நடக்கும் இடங்களைப் பாதுகாப்பு படைகள் முத்திரையிட்டனர்.

ISIS தீவிரவாதிகள் 2003-ஆம் ஆண்டு, ஈராக்கில் இருந்த அமெரிக்கர்களைத் தாக்கியப் பின், மீண்டும் 2014-ஆம் ஆண்டு படையெடுத்துவந்து, அந்த மாநிலத்தை ஆக்கிரமித்த படைகளுள் மிகுந்த இரக்கமற்ற படைகளாய் இருந்தனர். இரண்டாம் உலகப் போரிலிருந்து, அதிகமான அகதிகளை உருவாக்கியது. இந்த இயக்கம் சிரியாவிலிருந்தபொழுதுதான் ஏறக்குறைய எண்பது இலட்சம் மக்கள் இடம் பெயர்க்கப்பட்டனர். நாற்பது இலட்சம் மக்கள் நாட்டைவிட்டு தப்பி ஓடினர். மற்றும் 250, 000 பேர் கொல்லப்பட்டனர். எந்தவித நம்பிக்கையுமின்றி இன்றும் 40 இலட்சம் மக்கள் இன்னும் சிரியாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அருகிலிருக்கும் அரேபிய நாடுகள் அவர்களை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

சிரியாவின் ஜனாதிபதியான பாஷார்அஸ்ஸாதை துருக்கி இராஜினாமா செய்யச் சொன்னது. அவரை வெளியேற்ற தீவிரவாத இராணுவ பிரிவுகளுக்கு நிதியுதவி அளித்து முயற்சிகள் மேற்கொண்டது. டாமாஸ்கஸ் என்னும் நகரம் நிரந்தரமானக் குழப்பத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது. சிரியாவில் நடக்கும் இந்தச் சண்டையால் மத்திய கிழக்கு நாடுகளான சௌதி அரேபியா, குவாட்டர், துருக்கி மற்றும் ஈரானில் ஆட்சியைக் கைப்பற்ற சிறுசிறு போர்கள் நடந்துகொண்டிருக்கிறது. சிரியாவில் நடந்த உள்நாட்டுப் போரின் முதல் இரண்டு வருடங்களில், அரசிற்கு எதிராக எழுந்த கிளர்ச்சியாளர்களுக்கு குவாட்டர் $3 பில்லியன் US டாலர்ஸ் கொடுத்ததாக Financial Times என்னும் பத்திரிக்கைக் கூறுகிறது.

மக்களாட்சி தேர்தலின் மூலம் துனிஷியா மட்டும் அரேபிய எழுச்சியிலிருந்து வெளியேறி புதிய அமைப்புக்கள் மற்றும் அமைதியான மாற்றங்களைக்கொண்ட ஆட்சியை அமைத்துள்ளது. 2015-ஆம் ஆண்டு அரபு தேசங்களுள் முதலாவதாக துனிஷியா மட்டுமே முழு விடுதலை அடைந்துள்ளது என்று சமுதாய மரபாட்சிகளைக் கண்காணிக்கும் அமெரிக்காவைச் சார்ந்த Fueedom House என்ற நிறுவனம் கூறியுள்ளது. வியன்னாவைச் சார்ந்த

மக்களாட்சி தரவரிசை சங்கத்தில் இந்நாடு 32-வது இடத்தைப் பிடித்துள்ளது. அதே வருடத்தில் அந்நாட்டின் சமூக குழுக்கள் நோபல் பரிசை வென்றது.

முன்னேற்றம் அடைந்தாலும், மாற்றங்கள் மென்மையாக இல்லை, விடுதலை மற்றும் தகுதியை நோக்கும்பொழுது அந்தச் சூழ்நிலையில் மாற்றம் எதுவும் இல்லை என்கிறார். துனிஷியா பல்கலைகழகத்தில் மொழியியல் என்னும் துறையின் விரிவுரையாளராய் இருக்கும் Lina Mhenni கூறுகிறார். அவர்மேலும் கூறுகையில், "புரட்சியாளர்களின் நிகழ்வுகளால் சில மாதங்கள் நாங்கள் மகிழ்ந்தோம். ஆனால் மீண்டும் பழைய பழக்கங்களுக்குத் திரும்பிய பின், சித்திரவதைகள் தொடர்கின்றது, தனி மனித சுதந்தரத்திற்கு மரியாதையில்லாமல் போய்விட்டது."

**உரிமைக்கான அழுகுரல்:**

துவக்க காலத்தில், 1989-ஆம் ஆண்டு கிழக்கு ஐரோப்பாவில் நடந்த புரட்சியால் கம்யூனிசம் அழிந்ததுபோல்தான் இந்த அரேபிய எழுச்சியும் காட்சியளித்தது. துனிஷியா, எகிப்து, லிபியா மற்றும் ஏமனிலிருந்த அரசாங்கம் தூக்கியெறியப்பட்டது. யோர்தான், ஈராக் மற்றும் பெஹரைனில் அரசாங்க சீர்திருத்தங்கள் அரசியல் விடுதலையைக் கொடுத்தது. சௌதி அரேபியா மற்றும் அல்ஜீரியாவில் இருக்கும் ஏகாதிபதிகள் சமுதாய சீர்திருத்தமளிக்க வாக்குறுதிக்கொடுத்தனர். ஆனால் அந்த நம்பிக்கை குறைந்த காலமே நீடித்தது. எகிப்து ஏகாதிபதி ஆட்சிக்குத் திரும்பியது. சிரியா, லிபியா மற்றும் ஏமனில் அரசியல் மற்றும் சமுதாய குழப்பம் நீடித்தது. கிழக்கு மற்றும் மேற்கிலிருக்கும் இஸ்லாமிய நாடுகள் இன்றும் பிளவுபட்டே காணப்படுகிறது. ஏன்? இஸ்லாமிய மற்றும் இராணுவ ஆட்சிக்கு நிகராக வளமான ஆட்சி இன்னும் வரவில்லை. நடுத்தர வர்க்கத்திற்கு இஸ்லாமிய தேசம் சமூக நிவாரணம் மற்றும் கல்வியைக் கொடுத்தாலும், சௌதி அரேபியா, கத்தார் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் வாழும் பணக்கார ஏகாதிபதிகளின் ஊழலைத் தடுக்க அது ஒன்றுஞ்செய்யவில்லை. பிறர் கருத்தை அடக்குதல், இலஞ்சம் மற்றும் சமுதாய ஏற்றதாழ்வுகள் இன்றும் தொடர்கிறது.

**தேவனின் அமைதி திட்டம்:**

ஒரு தனி மனித நம்பிக்கைக்கும், அவன் வளமைக்கும் மனிதனின் தீர்வுகள் தோல்வியையே தழுவியுள்ளது. எல்லாவிதமான அரசாங்கமும் முயற்சி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவை எதுவுமே விரும்பிய அரசைக்கொண்டு வரவில்லை. யேகோவா தேவனால் மட்டுமே இதைச் செயல்படுத்துவார். அரேபிய எழுச்சி மற்றும் நம் நாட்களில் நடந்துகொண்டிருக்கும் புரட்சிகள் அனைத்தும், நீடித்து அமைதி மற்றும் நேர்மையான உலகத்தையும் செய்து முடிக்கும் வரம்புகள் மெய்ப்பித்துக் காண்பிக்கின்றது. தேவனுடைய திட்டத்தில், இந்த uprising நோக்கமில்லாமல் இருக்கவில்லை. ஆயினும் உண்மையில், இந்த uprising அனைத்தும் தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் உலகத்தின் காரியங்களில் யேகோவா தேவனின் குறுக்கீடு இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

செப்பனியாவின் தீர்க்கதரிசனத்தில், பூமியிலிருக்கும் கொடுங்கோல் ஆட்சியை, நமது ஆண்டவர் முடிவிற்குக்கொண்டுவரும் நேரம், வந்துவிட்டதற்குத் தேசங்களைக் கூட்டிச்சேர்ப்பது ஒரு முன்னோடியாக இருக்குமென்று குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த வசன பகுதியில் சகல ஜாதிகளும் "ஒருமித்து" கூடுவார்கள் என்று செப்பனியா முன் அறிவித்திருக்கிறார். சொல்லர்த்தமாக அனைவரும் பூமியின்மேல் ஒரே இடத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவதாகப் பொருளல்ல -- இது சாத்தியமில்லாத காரியம். ஆயினும் நம்முடைய காலத்தில் வரலாறு காணாதளவுக்கு தொலை தொடர்புகளின் கருவிகள் மூலமாக ஒருமித்திருக்கிறது. பூமியிலுள்ள எல்லா மூலைகளிலும் இருப்பவர்களை ஒயர்லஸ் அல்லது கைப்பேசிகளின் தொடர்புகளினால் தொடர்பு கொள்வது சாத்தியமாக உள்ளது. இந்நாளில் ஏழு பில்லியன் செல்லுலார் சப்ஸ்கிரிப்ஷன்ஸ்களுக்கு அதிகமானதும், மூன்று பில்லியனுக்கு அதிகமான இணையத்தள தொடர்புகள் உள்ளது. இன்றும் பாதி உலகத்திற்கு எந்தவிதமான தொடர்புகள் இல்லாதபோதிலும் பீமிங் பலூன்ஸ் மற்றும் மைக்ரோ சாட்டல்லைட்ஸ்சின் பயன்பாடுகளின் மூலம் இந்த நிலை துரிதமாக மாறிக்கொண்டு வருகிறது. சிரியா தேசத்தின் வீதியில் நடக்கக்கூடிய சம்பவத்தைச், சில நொடிகளில் உலகத்தின் பில்லியன் கணக்கான பார்வையாளர்களுக்குக் காண்பித்துவிடலாம்.

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிற படியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2 பேதுரு 3:7-13) என்று அப்போஸ்தலர் பேதுரு கூறுகிறார். இந்த "வானங்களும்," "பூதங்களும்" இந்தப் பூமியின் oppressive அமைப்புகளாக உள்ளது. தேவனுடைய நீதியான இராஜ்யத்திற்கு வழி ஆயத்தப்படுத்தும் படியாக மதம், சமுதாயம், அரசியல் மற்றும் பொருளாதாரம் -- அனைத்தும் யேகோவா தேவன் அவருடைய கோபாக்கினையின் "அக்கினியை" ஊற்றுவார். ஆயினும் இது பூமியின் அழிவைக் குறிப்பதில்லை. இந்நாளில் காணப்படும் தேசங்கள் அழிவின் விளிம்புக்கு வரவழைக்கப்படுவார்கள் என்று அர்த்தம். அதற்குப் பின் தேவன் ஜனங்களிடமாகத் திரும்பி, அவர்கள் விரும்பக்கூடிய விடுதலையின் நம்பிக்கையை, குறையற்ற உலகத்தில் கொண்டு வருவார். இயேசுவும் அவருடைய சபையும் மனித உரிமைகளைத் திரும்பக்கொடுத்து தேசங்களைச் சொஸ்தமாக்கி அவர்கள் மேல் ஆட்சிபுரிவார்கள். "தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள் இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்" (ஏசாயா 35:3, 4).

தேவன் பதிலளிப்பதை செப்பனியா "அக்கினிக்கு" ஒப்பிடுகிறார். மேலும் அதற்குப் பின் தேவன், "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (செப்பனியா 3:9) என்று கூறுகிறார். இங்குச், "சுத்தமான பாஷை" சத்தியமாகும். ஒருமுறை நீதியின் chastening கரங்கள் தேசங்களைப் பணியவைக்கும்போது, தேவன் அவருடைய ஆவியை மனுஷன்மேல் ஊற்றுவார் (அப்போஸ்தலர் 2:17). மேலும் இயேசுவும், சபையும் உயிர்த்தெழுந்த முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு.. . வழியாக ஜனங்களுக்குச் "சுத்தமான பாஷையைக்" கற்றுக்கொடுப்பார்கள். தீமை மற்றும் தீமையான மனுஷரின் அனுபவங்கள் நோக்கமற்றது அல்ல. இது மனுஷனுடைய செய்திகளை, தேவனுடைய சத்தியத்திற்கு ஒப்பிட்டுப்பார்க்க அனுமதிக்கும். அப்போது மனுக்குலம் தேவனை சேவிக்கக் கற்றுக்கொள்வார்கள் (வசனம் 9). மனுஷர் அனைவரும் சமாதானமும் வளர்ச்சியுள்ள சமுதாயத்தை கட்டுவதற்கு ஒருமித்து வேலை செய்வார்கள். அதில் ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் இருக்கும்.

"என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9) என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார். சமாதானத்திற்கேதுவான எத்தனை மகிமையான எதிர்பார்ப்பாய் இருக்கிறது -- மத்திய கிழக்கு பகுதியில் மட்டுமல்ல -- இந்த உலகத்தின் முழுமைக்கும்!

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள், திருச்சி.**

**கைப்பேசி : 9244611241, 8122224919**